உ

திருச்சிற்றம்பலம்.

# சிறுத்தொண்டநாயனார்

## சரித்திரகீர்த்தனை.

---

திருஎவ்வுளூர்

வேங்கடாசலசெட்டியாரவர்கள்

குமாரர்

**இராமசாமிசெட்டியார்.**

நூதனமாக இயற்றியது

இஃது

புரசை-அஷ்டாவதானம்

**சபாபதிமுதலியார்**

முன்னிலையில் பரிசோதித்தது

ஒட்டுலிங்கம்

**சோமசுந்தரசெட்டியாரவர்கள்**

கேட்டுக்கொண்டபடி

கா. தம்பிரான்ஆசாரி அவர்களால்

இராகதாளங்கள் அமைவித்து

ஷை இராமசாமிசெட்டியார்

குமாரர்

**தி. பாலசுந்தரசெட்டியாரால்**

சென்னை,

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1942-43

சாலிவாகன சகாப்தம் - ௲அ௱௫-ல் நிகழும்

சித்திரபானு௵ மேஷரவி

Registered copy right.

# விளம்பரம்.

—:0:—

இப்புததகம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் முத்தியாலு பேட்டை தம்புசெட்டி வீதியில் ந௰க-வது சதவிலக்கமுள்ளவீட்டில் திருஎவ்வுளூர் இராமசாமிசெட்டியாரிடத்திலும், சிதம்பரத்தில்கிழக்குக் கோபுரவாசல் வீதியில் சிவகாமசுந்தர தீக்ஷதரவர்க ளிடத்திலும், நாகூரில் பெருமாள் கோயில் மேலவீதியில குமபலிங்கசெட்டியாரவர்கள் குமாரர் சொக்கலிங்க செட்டியா ரவர்களிடத்திலும், கும்பகோணத்தில் பெரியகடைவீதியில் ஜவுளி. முனிசாமி செட்டியா ரவர்களிடத்திலும், தஞ்சை நகரத்தில் கீழவீதியில் போலீசு ஸ்டேசனுக்கெதிரில் ஷாப்புக்கடை வைத்திருக்கும் நா. க. சாமியாபிள்ளையவர்களிடத்திலும், மதுரையில் ஷாப்புக்கடை. அண்ணுசாமி பிள்ளை யவர்களிடத்திலும், பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை அணு - ரு - வெளி தேசத்தார்கள் மேல் விலாசத்துடன் புத்தகக் கிரையத்தையும் தபால் செலவையும் - உ - அணு தபால் முத்திரைத்தலையாக அனுப்புகிற பக்ஷத்தில் ரூபா க - இ - க - அணு வட்டத்துடன் அனுபபிபபெற்றுககொள்ள வேண்டுவது.

# சிறுத்தொண்டநாயனார்

# சரித்திர அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| விநாயகர் தோத்திரம் ... | க |
| சபாநாதர் தோத்திரம் ... | உ |
| உமாமகேஸ்வரி தோத்திரம் ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி தோத்திரம் ... | ச |
| சரஸ்வதியம்மை தோத்திரம் ... | ரு |
| சிவனடியார்கள் தோத்திரம் ... | சா |
| குருதோத்திரம் ... | அ |
| நூல்மகிமை ... | ஷெ |
| அவையடக்கம் ... | கூ |
| மங்களம் ... | க0 |
| தோடையம் ... | கஉ |
| சோழநாட்டுச்சிறப்பு ... | க௩ |
| திருச்செங்காட்டங்குடி யென்னும் நகரச்சிறப்பு ... | கரு |
| பரஞ்சோதியார் திரு அவதாரம் ... | கஎ |
| பரஞ்சோதியார் கல்வியிற்றேர்தல் ... | கஅ |
| காடவராஜனிடம்பரஞ்சோதியார் அணுக்கராதல் ... | ககூ |
| அரசன்பரஞ்சோதியாரை வாதாபி மீது யுத்தத்திற்குப் போய் ஜெயித்துவரும்படி சொல்லுதல் ... | உக |
| வாதாபிமன்னனுடன் பரஞ்சோதியார்போர்புரிதல் ... | உஉ |
| பரஞ்சோதியாரைவாதாபிமன்னன்சரணடைதல் ... | ஷெ |
| பரஞ்சோதியார் பகுதி முதலானதும் வாங்கிக்கொண்டு திரும்பிவருதல் ... | உ௩ |
| காடவமகாராஜன் பரஞ்சோதியாரைப் புகழ்தல் ... | உச |
| காடவராஜனுக்குப் பரஞ்சோதியார் பெருமையை மந்திரிகள் எடுத்துரைத்தல் ... | உசா |
| பரஞ்சோதியாருக்கு அரசன்நிதி முதலிய அளித்து அவர் பதிக்கேகும்படி விடை தருதல் ... | உஎ |
| சிறுத்தொண்டநாயனார் திருத்தொண்டுசெய்தல் ... | ௩0 |
| பிள்ளைவரங்கேட்டல் ... | ௩உ |
| புத்திரனைப்பெற்றுவளர்த்தல் ... | ௩௩ |

பக்கம்.

சீராளதேவருக்கு வித்தியாரம்பஞ் செய்தல் ... ... ௩௬
திருஞானசம்பந்த சுவாமிகள் வருகின்றனரெனக்கேட்டு சிறுத்தொண்ட நாயனார் மகிழ்தல் ... ... ௩௭
சிறுத்தொண்டநாயனார் திருஞானசம்பந்த சுவாமிகளை எதிர்கொண்டுபோய் தமதுபதிக்கு எழுந்தருளும் படி வேண்டுதல் ... ... ... ... ... ௩௮
திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப்பதிகம் திருவாய் மலர்ந்தருளுதல் ... ... ... ... ... ௩௯
பரமசிவன்வயிரவமூர்த்தங் கொள்ளல் ... ... ... ௪0
வயிரவமூர்த்தங்கொண்டபரமசிவம் திருச்செங்காட்டங் குடியென்னும் தலத்துக்கு எழுந்தருளுதல் ... ௪௨
வயிரவமூர்த்தி — நாயனாருடைய திருமாளிகை எங்கே யென்றுதேடுதல் ... ... ... ... ... ஷை
வயிரவமூர்த்தி-நாயனார்திருமாளிகைக்குவந்து அவரைக் காணுமல் கணபதீச சரத்தில் ஆத்திமர நீழலிற் போய் வீற்றிருத்தல் ... ... ... ... ௪௩
வயிரவமூர்த்திவந்த சேதியைச் சிறுத்தொண்ட நாயனாருக்கு மனைவியார் விளம்புதல் ... ... ... ... ௪௫
வயிரவமூர்த்தி சிறுத்தொண்ட நாயனாரை வினவுதல் ... ௪௬
வயிரவமூர்த்தியை அமுதுகொள்ள வரும்படி சிறுத் தொண்டநாயனார் வேண்டுதல் ... ... ... ... ௪௭
வயிரவமூர்த்தி தமது நியமனத்தின் தன்மை கூறுதல் ... ௪௮
சிறுத்தொண்டநாயனார் பசு அருமையல்லவென்றல் ... ௪௯
வயிரவமூர்த்திதாமுண்ணும்பசுவானதுநரபசுவென்றல் ௫0
சிறுத்தொண்டர் வயிரவர் சொன்ன சேதியை மனைவி யாரிடத்துரைத்தல் ... ... ... ... ... ௫௨
சிறுத்தொண்டநாயனார் மனைவியாருடன் ஆலோசித்தல் ௫௩
சிறுத்தொண்டநாயனார்சீராளதேவரைப்பள்ளிக்கூடத்தி லிருந்து வரும்படி அழைத்தல் ... ... ... ௫௪
சீராளதேவரை அலங்கரித்தல் ... ... ... ... ௫௫
மகவரிதல் ... ... ... ... ... ... ... ஷை
சமையல்செய்தல் ... ... ... ... ... ௫௬
வயிரவமூர்த்தியைத்திருவமுதுகொள்ளும்படிஅழைத்தல் ௫௭
திருவமுது பரிமாறும் விதந்தெரிவித்தல் ... ... ௫௮

பக்கம்.

வயிரவமூர்த்திக்குத் திருவமுதுபரிமாறுதல் ... ... ருகூ
தலையைக்கறி சமைக்கா திருந்தவிதம் சொல்லுமென வயிரவர்வினவுதல்... ... ... ... ... சு0
சிறுத்தொண்டநாயனாரையும் வெண்காட்டுநங்கையாரையும் சந்தனநங்கையார் தேற்றுதல் ... ... ... சுக
தலைக்கறிபடைத்தபின்நாயனார்சிவனடியார்களைத்தேடுதல் சுஉ
சிறுத்தொண்ட நாயனார் முன்னுண்ண வயிரவர் கடிந்துரைத்தல் ... ... ... ... ... ... சுங
வயிரவமூர்த்தி பிறகு தன்னோடு அமுதுண்ண உமது பிள்ளையை அழையுமெனல் ... ... ... சுச
சிறுத்தொண்ட நாயனாரும் வெண்காட்டு நங்கையாரும் வீதியிற்சென்று பிள்ளையை அழைத்தல் ... ... ஷை
சீராளர் அவ்வாறே வருதல் ... ... ... ... சுரு
பிள்ளையுடன்வந்தசிறுத்தொண்டநாயனாரும்மனைவியாரும் வயிரவமூர்த்தியைக்காணுமல் வருந்திமயங்குதல் ... சுசு
பரமசிவன்சிறுத்தொண்டநாயனார்முதலானவர்களுக்குத் தெரிசனந்தருதல் ... ... ... ... ... சுஎ
நாயனார்முதலியோர் சிவபெருமானைத் துதிசெய்தல் ... சுகூ
சிறுத்தொண்டர் முதலான பேர்கள் முத்திபெறுதல் ... எ0
மங்களம் ... ... ... ... ... ... ... எக
இக்கீர்த்தனையிலுள்ள இராகத் தொகை ... ... எஉ
விருத்தங்கீர்த்தனை முதலிய தொகை ... ... ... ஷை

---

இதில் ச-ம் பக்கம் உ-ம் வரியில் திரிபுடைதாளம் என்றிருப்பதை மாற்றி ரூபகதாளத்தில் பாடிக்கொள்ளவும்.

# சாத்துகவிகள்.

——:o:——

சென்னை வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தலைவர்

தஞ்சை-சதாவதானம்

## சுப்பிரமணியஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மாமேவுசைவமெனும்பயிர்வளர்ந்தமனத்தினராய்
மனையாள்பண்டி
சேமேவுபரன்விழைந்தகறிகாய்க்குநிலமாக்கொள்
சிறுத்தொண்டப்பேர்த்
தூமேவுபுகழாளர்சரிதைதனைக்கீர்த்தனையாச்
சொற்றானெவ்வுள்
தேமேவுகுணராமசாமிபத்திக்கனிபழுத்த
சிந்தையோனே.

---

முருகன்துணை.

புரசை - அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியார்

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

நாடகத்தேனகுமலர்சசோலையெவ்வுளூர்
நண்ணும்வைசியகுலமணி
நவில்வேங்கடாசலன்றருராமசாமியெனு
நல்லன்பனுயர்பாவிசூழ்
நாடகத்தேசெழுங்குன்றையதிபதிசோழ
நாட்டரசுசூட்டமைச்சு
நல்குசேவையர்பிரான்சொல்புராணந்தனில்
நவின்றவாலாறடியாபால்

நாடகத்தேமருவுவேதநெறிசைவநெறி
நனிபத்திநெறிபிறழ்கிலா
நங்கைபாகரதுடைமையென்றுரைசிறுத்தொண்ட
நாயனர்சரிதந்தமிழ்
நாடகத்தேவருமிசைச்சுவைபொருட்சுவை
நயம்பெறவமைத்துரைத்தான்
நம்பரடிபணிதிருத்தொண்டரருளாற்புவியி
னளும்வாழியவுவந்தே.

---

சென்னைக்கவர்ன்மெண்டு

நார்மல்பாடசாலைத் தமிழ்ப்புலவர்

## தி. க. சுப்பராயசெட்டியாரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

கடல்விளிம்புடுத்தகண்ணகன்வைப்பில்
மடனிகந்துயிர்கள்வளர்திருநீறு
பொருளெனக்கொண்டுதெருளொடுமுய்தரத்
திரையெறிபொன்னிப்புரைவளங்காட்டுஞ
செங்காட்டங்குடித்திருப்பதிதோன்றி
அங்காட்டகமைசேரடியவர்கிழமைத்
தொழுகுறுசெயலாலுற்றமெய்ம்மை
நிறுத்தொண்டவர்புகழ்சிறுத்தொண்டப்பெருந்தகை
காட்டுமெய்யன்பினைக்கற்றுளோரன்றியு
மீட்டியயேனையோருமுணர்ந்துயக்
கருதுமெவ்வளங்களும்பெருகுமெவ்வுளூர்வாழ்
முல்லையந்தொடைகமழ்மல்லலந்தோளான்
தாங்கரும்புகழ்சால்வேங்கடாசலமால்
செய்திடுதவமுருவெய்திவந்தென்ன
வணிகர்பெருங்குலமணிபெறத்தோன்றியோன்
வளத்துளாயான்றவண்மைமிக்குயர்ந்த
குளத்துழாமகாரிஷிகோத்திரச்சால்பினேன்
நிராமயமுக்க ணின்மலற்கன்புசால்

## சாத்துகவிகள்.

இராமசாமியெனும்பெயர்ப்புலவன்
கற்றோர்பாலுமற்றோர்பாலும்
அன்புமஅருளுமான்றசிந்தையோன்
பண்ணிசைநிறைந்தபா டற்கீர்த்தனையா
நண்ணியசுவையொடுநன்குறப்புனைந்து
வழுவாதென்றும்நிலைபெற
எழுதாவெழுத்தி லிசையவித்தனனே,

---

திருக்கயிலாச பரமபரைத திருவாவடுதுறை யாதீனத்து
ஸ்ரீ. ல. ஸ்ரீ. நமசிவாயதேசிக சுவாமிகள
மாணாக்கருளொருவராகிய
### சேற்றூர். அருணாசலக்கவிராயர்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பார்த்தனம்பாலூரிருவும்பன்றியைமுன்றொடர்ந்துசென்ற
பரற்கன்பாக
வீர்த்தனம்பாலுடனருத்தமகவையரிந்தார்சரித
மெவ்வுளோர்வாழ்
வார்த்தனம்பாகனமொழியார்மகிழ்ராமசுவாமியெனும்
வணிகர்கோமான்
கீர்த்தனம்பாவலர்புகழப்பாடியரங்கேற்றியும்முன்
கீர்த்திதானே.

---

திருமயிலை
### அ. சண்முகம்பிள்ளையவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

தானமெவற்றினுக்குமனனதானநனிசிறந்ததெனச
சாற்றக்கேட்டத்
தானமுனுற்றிக்கயிலைப்பொருபபணுகுஞ் சிறுத்தொண்டர்
தனிப்புராணங்
கானவிசைபரந்தோங்கக்கீர்த்தனமாவிசைத்துமனங்
கனிந்தளித்தான்
வானளாஞசிகரியெவ்வுட்பதிராமசாமியாம்
வள்ளியோனே.

---

திரிசிரபுரம்
ம-ா-ா-ஸ்ரீ, மஹா விதவான்
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்மாணாக்கர்
அரன்வாயல்

## வேங்கடசுப்புபிள்ளையவர்கள்

இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அன்புமிகுசிறுத்தொண்டர்புகழ்சசரிதமிசைக்கிசைந்த
வணியாமென்ன
வின்பமுறுஞ்சொன்னயமொன்றிடவமிழ்திற்செந்தமிழ்சே
ரிசையிற்றந்தான்
றன்புகழ்விஞ்சிடுமெவுளூர்வணிகர்குலவேங்கடா
சலவேண்மைந்தன்
மன்புலவர்கண்மணிரோமசாமிபபெயர்ப்பா
வல்லோன்மாதோ.

(ஷை யார் வெண்பா.)

தேனுக்குங் கண்டொக்குந் திததிகரும பாலொக்குந்
தானுற்றுக் கேட்பவரைச சந்ததமெய்ஞ் - ஞானத்து
ளன்புடனே கொண்டுய்க்கு மணணல் பரஞ்ஜோதி
தன்புகழா மிககீர்த் தனம்.

---

கநதமங்கலம்.

## சுப்பராயஉபாத்தியாயரவர்கள்

இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருததம்.

மன்னியசீர்சசிறுத்தொண்டர்சரித்திரத்தைக்கீர்த்தனமா
வகுத்தேபூவில்
துன்னுபத்திகலமறியுஞ்சுதந்தரமும்பவமறுக்குந்
தொன்மையான
பன்னுசைவநெறியறியும்பத்தர்சமுகத்துறவும்
பரிந்தெவ்வுள்வாழ்
உன்னுமுயர்வைசியகுலராமசாமிப்புலவ
னுரைத்தான்மாதோ.

---

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலவர்

**கோ. இராசகோபாலபிள்ளையவர்கள்**

மாணாக்கரும்

சென்னை முத்தியாலுபேட்டை பாலிகாபாடசாலைத்

தமிழ்ப்போதகருமாகிய

பெருங்காஞ்சி

**உலோகநாதமுதலியாரவர்கள்**

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

தார்பூத்தமலர்க்கடுக்கைநதிவியாளந்
தண்மதியுமணிந்தசெழுஞ்சடிலப்பெம்மான்
சீர்பூத்தவிணையடியையுள்ளத்துன்னித்
திருவருள்பெற்றிடுமறுபான்மூவர்தம்முள்
பார்பூத்தசெஙகாட்டஙகுடியென்றேநகும்
பதிவளர்மெய்ச்சிறுதொண்டர்சரித்திரத்தை
ஏர்பூத்தநாடகமாச்செய்தானெவ்வுள்
இராமசாமிப்பெயர்கொளிசைவல்லோனே.

---

குளத்தூர்

**சடையாண்டிசெட்டியாரவர்கள்**

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புகல்பெரியபுராணமெனுங்கடல்படிந்துசிறுத்தொண்டர்
புகழ்மெய்யன்பு
நிகழுமுயர்சரித்திரமாமின்னமிழ்தைநனியருந்தி
நீர்மையில்லார்
துக்கமனத்துமடமைவெப்பந்தபுத்துநற்கீர்த்தனைமழையைச்
சொரிந்ததெவ்வுள்
நகர்வயின்வாழ்தருராமசாமிமுகிலுலகுவப்ப
நயந்துமாதோ.


---

சிவபூசாதுரந்தரனென்று பேர்பெற்றுவிளங்கிய
ஐயம்பேட்டை - நெல்லையப்பமுதலியாரவர்கள்
குமாரர்

## சிவகுருநாதமுதலியாரவர்கள்

இயற்றிய ஆசிரியவிருத்தம்.

ஏர்கொண்டகலியாப்தநாலாயிரத்துத்
தொளாயிரத்தெண்பத்திறைன்
இயல்சாலிவாகனசகாப்தமோராயிரத்
தெண்ணூற்றின்மேலெரைந்தா
மியம்பிடும்பிரபவாதிநிகழாண்டுபதிறை
றினிற்சித்ரபானுவருடத்
திசைகொள்சித்திரைமாதமீராறெனுந்தேதி
யேய்ந்திலகுபூர்வபட்சஞ்
சீர்கொண்டபானுவாரம்புனர்ப்பூசநட்
சேத்திரஞ் சுகர்மயோகஞ்
செப்பரியதிதிசஷ்ட்டிதைதுலைக்கரணமுஞ்
சேர்ந்தவிச்சுபதினத்திற்
றிசைபரவுதொண்டைநாட்டிற்சென்னைபுரிதனில்
ஸ்ரீமரகதாம்பிகையிடந்
திகழ்வுறைமல்லிகேஸ்வரர்திவ்யசன்னிதி
திருச்சபாமண்டபத்தில்
கூர்கொண்டமதிஞராம்வடநாலுணர்ந்தவர்
கொழித்தசெந்தமிழ்வாணர்கள்
கூறுதற்கரியபலபாஷைவிற்பனர்களுங்
குதுகுலித்தகமகிழ்ந்தே
கொண்டாடவுயர்பஞ்சவிதகருவியோங்கிடக்
குலவும்வக்குவர்மரபினேன்
கொற்றமார்வேங்கடாசலமால்செய்மாதவ
குமாரனுத்துங்கமாரன்
பார்கொண்டபுகழோங்குகெம்பீரனெவ்வுளூர்ப்
பதிவாழ்சிங்காரனினிய
பண்புபெறுராமசாமிக்குரிசிலன்புறப்
பண்ணவர்வணங்கியென்றும்
பராவுநல்லாதிபுரிவளர்கௌரிவடிவம்மை
பத்மதளநேத்ரவருளால்
பகர்சிறுத்தொண்டர்சரித்திரக்கீர்த்தனை
பரிந்தரங்கேற்றினனே.



உ

சிவமயம்.

# சிறுத்தொண்டநாயனார்

## சரித்திரகீர்த்தனை.

### பாயிரம்.

காப்பு.

### விநாயகர் தோத்திரம்.

நேரிசைவெண்பா.

நீர்தங்குவேணியர னேயர்சிறுத்தொண்டர்கதை
சீர்தங்குநாடகமாச் செப்பிடவே - வார்தங்கு
சொர்ன்னகும்பவானைமுலைச் சுந்தரிமுன்தந்தமத
கர்ன்னகும்பவானைமுகன் காப்பு.

விருத்தம்.

செந்துவர்வாய்க்கிள்ளைமொழியுமையினைப்பாகத்தில்வைத்த
திவ்யசோம
சுந்தரனார்புயமலையிலேறிவிளையாடிடுமைந்
துகரநால்வாய்
முந்தியமும்மதவிருசாமரகர்ன்னவோரானை
முகத்தினன்றன்
சந்தமலர்ப்பதந்துதித்துச்சிறுத்தொண்டர்நாடகம்நான்
சாற்றுவேனே.

தரு - இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

கஜானனு சரணம் - உமைசுத
கஜானனு சரணம்.

அநுபல்லவி.

நிஜானந்தமூலா தாரசுக வற்புத
நீதசகலலோக நாதசுர பூஜித. கஜா.

சரணங்கள்.

கடலுளுயர்ந்திடும்பாற் கடலில்வரும்பிர சண்ட
காளகூடவிஷங் கனிந்தமுதா யுண்ட
நடனற்குப்பிள்ளைக்கறி நன்கிடுஞ்சிறுத் தொண்ட
நாயனுர்சரித் திரகீர்த்தனஞ்சொல
நீயெனுவில்நின் றருள்புரிமிகுவல. கஜா.

இவ்விதமெய்யன்பு யாவர்க்குமிலை யென்ன
இசைமுப்புவனத்தோரு மிதையத்தில்மகிழ் துன்ன
செவ்வியசேய்க்கறி சிவனுக்கிடும்விற் பன்ன
தீரமார்தொண்டர் சரித்திரம்நவரச
மாரநாடக முரைத்திடவருள்நிச. கஜா.

சுந்தரர்சொல்திருத் தொண்டத்தொகையிற் சேர்ந்த
சுகிர்தமேவுஞ்சிறுத் தொண்டர்சரிதந் தேர்ந்த
சந்தமதுரமார் கீர்த்தனஞ்சொல்லவரு ளார்ந்த
தாமலோசனம் பார்த்திரட்சியுந்துல்ய
வாமமேவும்வல் லபைமகிழும்பிரபலய. கஜா.

---

## சபாநாதர் தோத்திரம்.

விருத்தம்.

திகழுமெய்ப்பத்திவாய்ந்த சிறுத்தொண்டர்சரிதந்தன்னைத்
துகளில்நாடகமதாகச் சொலவகிலாண்டமேவுந்
தகையுயிர்க்குயிராய்மால்வே தாமுதலோர்கள்போற்ற
மகிழ்நடனஞ்செயபெம்மான் மலர்ப்பதம்வணங்குவாமே.

தரு-இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடியபாதத்தை மறவாமற்றுதிசெய்ய
அநுக்கிரகம் புரியீசனே.

அநுபல்லவி.

தேடித்துதிசெயன்பர் சித்தத்தின்றுயர் நீக்கித்
தினமுமெடுத்தாட்கொள்ளுஞ் சிறசபைதனிற் றூக்கி. ஆடிய.

சரணங்கள்.

விரித்தசெஞ் சடையாட விளங்கும்வெண் மதியாட
மேவுங் குண்டலமாட வெண்டலை நிரையாடத்
தரித்த புலித்தோலாடத் தண்டைசெஞ் சிலம்பாடத்
தாவுஞ் சேல்விழிநாடப் பாவையுமை கொண்டாட. ஆடிய.

ததிங்கணத் தோமெனத் தாளந்திருமால் தட்டத்
ததிங் ததிம்மென மிரு தங்கம் நந்தியுங் கொட்ட
விதியாக யாழ்வே தன் மீட்ட மிகவுந் துட்ட
வெம்முய லகன்கொட்ட மும்மடங்கவுங் கிட்ட. ஆடிய.

கைக்குள்ளே டமருகங் கணகணென வொலிக்கக்
கதிர்வீசு மான்மழுக் கரதலத்தில் ஜொலிக்க
விக்ரமப் பத்ரகாளி வெழ்கசிக் தலைகுனிக்க
விண்ண வருமதிக்க மண்ண வருந்துதிக்க. ஆடிய.

ப்தஞ்சலியும் வியாக்ர பாதரும்புகழ நன்று
பகர்தும்புரு நாரதர் பரிவாயிசை புகன்று
துதிசெய மெய்யன்பர் சிவசிவசிவ வென்று
தொழுது வணங்கமன்றுள் அழகாயன்பொடும் நின்று. ஆடிய.

---

## உமாமகேஸ்வரி தோத்திரம்.

விருத்தம்.

கனகசபையில்நிர்த்தமிடுங் கர்த்தன்மகிழத்தொண்டுசெயும்
அனகசிறத்தொண்டரின்சரிதம் அணிநாடகமதாய்ப்புகல
சனகனுதியோர்பரவுஞ் சம்புவாமத்தமர்ந்தவுமை [மே.
பனகமணிச்செஞ்சிலம்பிசைக்கும் பதமேயெனக்குத்துணைநித

தரு - இராகம் - சங்கராபரணம் - திரிபுடைதாளம்.

பல்லவி.

திரிபுரசுந்தரி-எனக்-கருள்சுதந்தரி.

அநுபல்லவி.

பரிபுரந்திகழ் பாதவி நோதி
பார்வதிஜெய மாபினைக் கியாதி. திரிபுர.

சரணங்கள்.

இமையகிரி சிலி - ராஜரா
ஜேஸ்வரி திரிசூலி
அமலமாதவர்தோத்ர விசாலி
ஆனைமுகனைத்தரு பரிபாலி. திரிபுர.
கொன்றைமலர்த் தாரி - எழிலார்
கோமள ஸ்ரீங்காரி
வென்றிசேரும்பிரபுடக வுதாரி
வீரிசூரி மகிஷ சம்மாரி. திரிபுர.
தவளமதி வேணி - ஒளிர்பா
சாங்குச பாணி
அவனிபுகழும்பதினெண் புராணி
ஆதிஜோதிநித்யகல் யாணி. திரிபுர.

---

## சுப்பிரமணியசுவாமிதோத்திரம்.

விருத்தம்.

தன்மவசியகுலத்துருத்ர சன்மனெனவந்தாறெண்மர்
முன்மகிமையாயிருந்துதமிழ் முழுதுந்தேற்றுமுருகோனே
நன்மைபரவுஞ்சிறுத்தொண்ட நாயனார்கீர்த்தனம்பாடக்
கன்மமகற்றுந்திருவருட்க டாடசஞ்செய்தேகாப்பாயே.

தரு - இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

கடாட்சஞ்செய்திடவேண்டும் - அடியேன்மீது
கடாட்சஞ்செய்திடவேண்டும்.

அநுபல்லவி.

கடாட்சவுமைதரும் கதிர்வேல்கைப் பிடித்துக்
கபடுசெய்சூர்குலங் களைவேரற மடித்து
சடாட்சரப்பொருளென் றெவருந்துதிக்கும் கண்ய
தாமநீபலாவண்ய சுவாமிபாலசுப்ர மண்ய. கடாட்ச.

சரணங்கள்.

இனியமுத்தமிழ்சொலுங் கீரன்மனது சோர்ந்து - துதிக்க
யிலகுமனந்தனுடல் நெளிக்கமயிலை யூர்ந்து [மணி
முனம்அந்தபூதத்தின் முடிமண்ணில்விழத் தாக்கி
முகமகமலர்ந்திட முதிர்ந்தசிறையை நீக்கி
'கனிவொடுங்காத்த கருணாநிதியெனும் பிரபோத
ககனதேவர்கள்நாத சுகமுலவும் விநோத, கடாட்ச.

சதுரா னனன்சக் ராயுதன் வாதித்துக்-காணரிய
தாணுவின் செவியிற் ப்ர ணவந்தனைப் போதித்து
துதிபெறு மிங்கிதசோதிப்பவள வாயா
சுந்தர தெய்வயானை தோகைவள்ளிதன் நேயா
மதிநிகருஞ் சண்முக மங்களாகர வுல்லாச
வானவர்பணி விஸ்வாச தீனரட்சக விஸ்வேச. கடாட்ச.

கும்பமுனிக் கதுல வின்பம் அருளு தாரா - அண்ட
கொக்கரிததிடு முக்ர குக்கிடத் துவஜ வீரா [மதிரக்
அம்புய மலருறை அணிதிரு மால் மருகா
ஆரணனை சிறை விடுத்த ஜெய முருகா
நம்பித் துதித்தவொரு நல்லரிவையின் வெவ்விய
நலியையகற்றுஞ்செவ்விய நிலைமிகுத்திடுந்திவ்விய.கடாட்ச.

---

## சரஸ்வதியம்மைதோத்திரம்.

விருத்தம்.

வண்டாரும்பூங்குழலுமதிமுகமுங்கருணைவளர்
வடிவேற்கண்ணுங்
கண்டானநயமொழியுஞ்செபவடம்புத்தகமணிந்த
கரமுஞ்சீர்சால்
ஒண்டாமத்திருவடியுமிலங்கவெள்ளைநிறத்தாயென்
னுள்ளமான
வெண்டாமரைக்கணிருந்தளிப்பாயிந்நாடகத்தை
விளம்புதற்கே.

தரு—இராகம்—சகானா—ரூபகதாளம்.

பல்லவி.

பாரதி—அருள்கிரு பாநிதி.

அநுபல்லவி.

பூர்நகலாமதி மாமுக சுந்தர. பாரதி.

சரணங்கள்.

எங்கும் விரிந்திடு கங்குல கற்றுமுத்
துங்க பிரபை பொங்குரு செஙகதிர்கண்டலர்
வங்கண பிர்ங்கசங் கஙகுலவிங்கித
பங்கஜ மென்பதி தங்கிய மங்கள. பாரதி.

அண்டமெழிற் பகி ரண்ட முதற்பல
கண்ட சராசர முண்டு பண்ணுந்திறங்
கொண்டுக மண்டலந் தண்டங கரந் திகழ்
முண்டக வாதனன் பெண்டெனுமற்புத. பாரதி.

ஓதிடு மாகம வேத புராணவி
நோத சுபாஷித மாதுவிசாலி பிர்க்
கியாதி புராதனி நீதிகொள் மாதவர்க்
கேதமிலா வனுபூதி யருள்செய்யும். பாரதி.

---

## சிவனடியார்கள் தோத்திரம்.

விருத்தம்.

உலகுபுகழ்செங்காட்டங்குடிவளருஞ்சிறுத்தொண்ட
ருயர்சரித்ரம்
இலகியநாடகமியம்பநெடியகயிலாயகிரி
யிறைவனுக்குப்
பலவகைத்தொண்டினைப்புரிந்துமுத்திநெறிகண்டஅன்பர்
பாதமாஞ்செஞ்
சலசமலர்த்துணைமுடியிற்சூட்டிமனமேநிதம்வந்
தனைசெய்வாயே.

தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

சரணுரவிந்தத்தை மனமேநீயன்பாகச
சந்ததந்துதிசெய்குவாய்.

அநுபல்லவி.

கருணுகரபரமர் கழலைப்பரவிமுத்திக்
கரைகாண்சைவசமய
விரதஅன்பருபைய. சரணு.

சரணங்கள்.

அண்டமருவுஞ்சுரர் அயன்முதலான மூவர்
யாருந்தொழுங்கயிலைக் காவல்மகானு பாவர்
தண்டாமரைப்பததத்தை வணங்கவருவார் யாவர்
தமையுங்கட்டளையாலுள் விடுத்திடும் நந்திதேவர். சரணு.

கிரணக்கலாபமா யூரமூருங் கார்த்தி
கேயனேவந்தவதரித்துத்தண்ணருள் பூர்த்தி
அரணுற்பெற்றநகம் பெண்ணுக்கிமிகவுங் கீர்த்தி
யமைந்தசீகாழிதனே நயந்தசம்பந்த மூர்த்தி. சரணு.

திருப்புக்கொளியூரவி நாசியில் வெவ்விய
திறல்கொண்டுமூன்றுண்டு முன்னுலே கவ்விய
பெருத்தமுதலைவாயி லிருந்தொரு செவ்விய
பிள்ளையைத்தருவித்த வள்ளல்சுந்தரர் திவ்ய. சரணு.

கருங்கல்லேதெப்பமாக்கொண் டலைகடலையும் வரு
கன்மப்பிறவியென்னுங் கடலையுநீந்தித் திரு
வுருவளருங்கங்கா தரப்பிரான்மேற் பொரு
ளுற்றதேவாரஞ்சொல்லும் அப்பர்சுவாமிக ளிரு. சரணு.

சிட்டர்குருந்தநீழ லிற் சிவஞான போத
சித்தியருளப்பெற்றுப் புத்தரைவென்று வேத
வுட்பொருளானதிரு வாசகஞ்சொல்லும் வாத
வூரில்வருமாணிக்க வாசகசுவாமி பாத. சரணு.

# குருதோத்திரம்.

விருத்தம்.

விளங்குமுப்புவனந்துதிசெயும்வேற்செவ்
வேளொருவடிவமதெடுத்து
வெயிலவன்மரகதக்குரகதத்தின்
விடாய்தவிர்த்தலர்பொழில்விண்ணு
டளந்திடுந்தணிகையம்பதிமேவி
னெலெனத்தோன்றிவந்தணிவீ
ராகமசைவநெறிவழியொழுகி
அண்ணல்பூசனைவிரதங்கூர்
களங்கமிலாச்செந்தமிழெழிலுவிற்
கமழருத்ராட்சமுமிலிங்கங்
கனவுரமீதுமருவிவீற்றிருக்கக்
கதியெனவடைந்திடுமென்னை
உளங்கனிந்தமலபோதமீய்ந்தாண்ட
வுத்தமக்கந்தசுவாமி
யுயர்குருசெந்தாமரைத்துணையடியை
யுகந்தென்றன்சிரம்புனைந்தனனே.

---

## நூல் மகிமை.

விருத்தம்.

தகமைகொளுநற்சிறுத்தொண்டர் சரிதமாகுமிந்நூலின்
மகிமையதனையனந்தன்றன் மணிநாவிரண்டாயிரத்தானும்
புகலவருமையெனிற்றமியேன் புகல்வதற்குந்தரமுமுண்டோ
ஜெகமீதிதைநாடகமாகத் தெரிந்தமட்டுஞ்சொல்வேனே.

தரு - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

இந்தச்சரிதத்தின்மகத்துவந்தனைப்போலே
யினியொருசரிதத்தும்உண்டோ.

அநுபல்லவி.

சிந்தையில்நினைத்தவர் சஞ்சிதப்பவ நீக்கும்
தீர்க்கமேவுஞ்சகல பாகயமும் உண்டாக்கும். இந்த.

சரணங்கள்.

ஆதிசிவன்வயி ரவ ரூபந்தனை நண்ணி
அன்பனைச்சோதிக்கத் தம்மனத்தினி லெண்ணி
ஓதியபடித்திரு வுளங்கனிந்து விசிட்ட
முன்னுந்தொண்டர்தம்பிள்ளை தன்னைசசமைத் திட்ட. இந்த.

மற்றெந்தச் சரிதமுங் கேட்டிட மறு தரம்
மனந்தன்னில் வெறுப்பாகும் விளங்குமிச் சரித்திரம்
எத்தனை தரங் கேடட போதினுந் தானே மகிழ்
வெய்தும் ஆனந்தமுண்டாம் இருநில மெங்கும் புகழ். இந்த.

வாசமுக்கனி தேன்பால் இதற்குமுன்னே கசக்கும்
வைப்பறியா மூடர்க்கும் பத்தியை விளை விக்கும்
ஆசையுடனே யிதையடைவாகவே நிதம்
அடுத்துத் துதிசெய்வார்க்குக்கொடுக்குமேலாம் பதம். இந்த.

---

## அவையடக்கம்.

விருத்தம்.

குலவுமொருசிற்றெறும்புகடல்நீரெல்லாங்
குடித்தேப்பமிட்டுவடவனையைத்தானே
கலகலக்கஅசைத்திடுவேனென்னல்போலக
கலாதநான்சிறுத்தொண்டர்சரிதந்தன்னைச்
சொலவந்தேன்கீர்த்தனமாப்பெரியோரோயென்
சொல்லில்வழுவுற்றிருந்தபோதுமநீங்கள்
நலமருவுஞ்சிவனடியார்கதையென்றன்பு
நாட்டுவீர்பொறுத்திதுபாராட்டுவீரோ.

தரு - இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

என்னபிழை யிருந்தபோதும் உங்கள்மன
திரங்கியாள்வீர் பெரியோரோ.

அநுபல்லவி.

நன்மைமேவுஞ்சிறுத் தொண்டர்சரித்ரக் கான
நாடகமிதனிற்சொற் பொருள்வழு முதலான.என்ன.

சரணங்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத்
தொகையிற்சொல்ல நம்பியாண்டார் — நம்பி
அந்தமிலகுங் கலித்துறையாய்ச்சொல்ல அதை
அகமகிழ்ந்தன்பினைப் பூண்டார்
விந்தைகொளச்சேக்கிழார் புராணமா விபரித்து
விளம்பஅவர்கள்மெல் லடியினைப் பூசித்து
மந்தபுத்தியுடைய அடியேனன்பு பதித்து
வளரும்நாடகமாகச சொல்லலுற்றேன் மதித்து.என்ன.

கலபமாமயிலாட வான்கோழியதுதனைக்
கண்டெதிராடுதல்போலே — கல்வி
சொலபமுங்கல்லாத பாமரன்யான் சிறுத்
தொண்டர்சரிதம் ஆசையாலே
நிலவுங்கீர்த்தனமாகச் சொலலுற்றேன் பூந்தாது
நிறைந்ததாழம்பூவை முள்ளென்று தள்ளாது
குலவுமணத்தாற்சூட்டிக் கொள்ளுவார் புவிமீது
குணங்கொள்அடியார்கீர்த்தி விளங்குவதா லீது.என்ன.

நவரசஅலங்காரத் துடன்கற்பனைகளாக
நவிலவறியாச்சின்னஞ் சிறியேன் — மிகக்
கவிதைசாதுரியமாக் கட்டுமோனைகளுங்
கவினுறஅமைககவும் அறியேன்
செவியிலேற்கச்சிறு குழந்தைமொழியைக் கண்டு
சினங்கொள்ளார்பெரியோர்க ளெப்போதுமனம்விண்டு
புவிதனிலாவின்பாலாற் பானையைப்பார்ப்ப துண்டு.
போலுஞ்சொன்னதுபுன்சொலாயினுங்கிர்பைகொண்டு.என்ன

---

## மங்களம்.

விருத்தம்.

துங்ககஜவதனவிநாயகர்க்குந்திவ்ய
சுப்ரமண்யசுவாமிமுதல்முனிவரர்க்குந்
திங்களணிசடைமுடியெம்பெருமானுக்குத்
திருத்தொண்டுபுரிந்தசிறுத்தொண்டருக்கும்

எங்கள்தொண்டத்தொகையுரைத்தநாவலூரர்
இலகியசீர்கொண்டநம்பியாண்டார்நம்பி
வங்கணஞ்சேர்சேக்கிழார்சுவாமிகட்கும்
வளஞ்சொல்வேன்சுபகரமங்களஞ்சொல்வேனே.

தரு – இராகம் - சுருட்டி – ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் – திவ்ய மங்களம் – சுபகர
மங்களம் – ஜெயமங்களம்.

அநுபல்லவி.

புங்கவரனுதினம் போற்றிசெய் நாயக
பூதநாதவேத கீத சுதாயக
துங்கப்பிரபோத விநோதசு சீலர்க்கு
ஜோதித்திரிசூலர்க்கு வேதாகம மூலர்க்கு. மங்களம்.

சரணங்கள்.

இமையபர்வதராஜ புத்ரிமகிழும் நாத
இங்கிதபிர்ங்ககண மிசைசெய்பதும பாத
அமுதமர்மதியினை யணிந்திடு நேயர்க்கு
அருணநேர்காயர்க்கு தெருண்மணி வாயர்க்கு. மங்களம்.

சலந்த ராசுரசம் மாரவற்புத தீர
சாமகானலோல சம்பிரமகாம் பீர
பொலந்திகழும்பஞ்சா னனசுப்ர தீபர்க்கு
புகல்கிரிசாபர்க்கு சுகிர்தப்பிர தாபர்க்கு. மங்களம்.

சோமசூர்யாக்நித்ரி யக்ஷமகானு பாவ
சுகிர்ததவளபூதி தூளிதாங்க தேவ
மாமருவும்அஷ்ட்ட புயாசல தாமர்க்கு
மகத்துவநேமர்க்கு சகஸ்த்திர நாமர்க்கு. மங்களம்.

பாயிரம் - முற்றிற்று.

---

## தோடையம்.

கடவுள்வணக்கம்.

விருத்தம்.

பூதிநலுருத்திராட்சம் பூண்டமெய்யடியார்தம்மை
ஆதியாஞ்சிவபிரானென் றன்பொடுமுளத்திலெண்ணி
நீதியாய்வணங்கிப்போற்றும் நிறைசிறுத்தொண்டர்ஞான
ஜோதிசீர்நாடகத்தின் றோடையம்புகலுவேனே.

இராகம் — நாட்டை — ஜம்பைதாளம.

தானமதனிற்பிர தானமெனுமன்ன
தானமதைச்செயுந் தானபரனென
நானிலமுமகிழ் வானசிறுத்தொண்டர்
நாடகத்தைசசொல்லவே ஆ—ஆ
ஊனமுறும்பவ மான துயரற
ஞானமுதவு நிதான வருளெனுந்
தானமழைபொழி ஆனை முகபதி
தாளிணைகள் துணையே. ஜெயஜெய.

ஆறுமிருவினைக் கோறுமழிந்துடன்
மீறும்பவமுமென் றூறும் விலகிட
நாளும்பெரும்புகழ் நீளுஞ்சிறுத்தொண்டர்
நாடகத்தைச் சொல்லவே ஆ—ஆ
வேளுந்தொழுமெழி லாளன்குறத்திம
ணாளன்செழித்தப்ர வாள நெடுங்கிரித்
தோளன்தணிகைச்செவ் வேளினிணைமலர்த்
தூயபதந் துணையே. ஜெயஜெய.

மாலுமயனுமெக் காலும்புகழ்ந்திரு
பாலும்உறமகிழ் சூலதரரருள்
ஞாலமதிற்கொள் விசாலசிறுத்தொண்டர்
நாடகத்தைச் சொல்லவே ஆ—ஆ.
ஆலமருந்திய காலகாலகல்
லாலிநிழலிலோர் நாலுமுனிவர்க்கு
மூலமறைப்பொருள் சாலவுரைத்தருள
மூர்த்திபாதந் துணையே. ஜெயஜெய.

ஆயுமறைசொல்செவ் வாயரடியர்ச
காயர்பதம்பணி நேயசிறுத்தொண்ட
நாயனார்புகழ்வாய்மையாகிய
நாடகத்தைச் சொல்லவே ஆ-ஆ
தாயினருள்புரிமாயனயன்அர
நேயவுமையவள் தூயகலைமகள்
சேயமலர்மினுபாயவடியவர்
சேவடிகள் துணையே. ஜெயஜெய.

---

## சோழநாட்டுச்சிறப்பு.

விருத்தம்.

நீங்கிடாதெந்நாளும்நெடுங்காவேரி
நீர்வளத்தால்தடவிகடநெடியகொம்பு
தாங்கியெழுமும்மதத்துயானையுள்ளே
தாம்புகுந்தபோதுமதுதெரிவுறாமல்
ஓங்கிவளர்செஞ்சாலிவயல்கள்சூழ்ந்தே
யுயர்சோழவளநாட்டின்பெருஞ்சிறப்பைத்
தீங்கிலாத்தமிழதனாற்புகலநெஞ்சந்
தேறுவேன்தெரிந்தமட்டுங்கூறுவேனே.

தரு - இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சோழதேசத்தின்மிகு வளந்தனையளவிட்டுச
சொல்லத்தரமோவிரித்து.

அநுபல்லவி.

வேழமீதிற்பவனிவருமணிமுடிசூடும்
மேன்மைபெறுசரத ராஜர்கள்தம்மிடமனதினின்மேவிய
பான்மையொடுபுகழுமானிலகன்னிகைதிகழ்முகமாகிய.சோழ

சரணங்கள்.

மாதவமேவகத் தியமுனியின் கரக்க
மண்டலந்தனிலிருந் திலகுநீரைச் சுரக்க
ஓதுங்காவேரிநதி நாமங்கொண்டே யிரக்க
முற்றுச்சகலவுயிர் களையுமன்பாய்ப புரக்க

உனதத்தொடுபல வழிவருபுனல்மத
கினில்தத்தியேவயல் புகுதலும் உழவர்கள்

உவகையோடு எதிரில்காண விபுதருஞ்
செவியைமூட கரமதோடு கரங்கொட்டி

பூரிலுளவுழவர் ஏருழநெல்விளை கழனியில் நத்திய
சீருலவுமுழவ மாதர்களிந்திரன் துதிசொலி வித்திய. சோழ.

பாவுறும்நென்முளை வளர்ந்துமிகவும் ஓங்கிப்
பால்கொண்டுகருமுற்றிப் பசியகதிர்கள் வாங்கி
மேவப்பள்ளர்களரி வாளைக்கரத்திற் றாங்கி
விருப்பமுடனறுத்து மேருமலைபோற் றேங்கி

மிளிரப்பலவித நிறமுளவெருதுகள்
விளும்அக்குவியலி லுறமிதி படுமதில்

மிகுதியான மணியைவாரி யரசர்கள்
பகுதியான கடமைவீசி மிகுமதில்

மீளுமதிசுகிர்த தேவதைவிப்பிரர் பெரியவர் விருந்துணும்
ஆளரொடும்உறவர்போசனஞ்செய்திடச்செயுங்குடிகளும்நணும்
[சோழ.

சாபானுக்ரகசாமர்த் தியமுனிவர்கள் வாசம்
தங்குவாரொங்குமறை யோர்கள்கொண்டு நேசம்
பாபமகற்றச்செய்யும் வேள்விப்புகையா காசம்
பரவஅதனைமேக மென்றுமிகவி லாசம்

பதிநற்றகைமல ருறுபொழில்தனின்மயில்
ததிதத்திமிதக தகதகதகவென

பசுமைமேவு கலபநீவி நடமிட்
இசைகொள்கீதம் அளிகள்பாடி மகிழ்வுறு

பாரில்நிறைபுனித மேவிய சிவனடியவர்களுந்துன்னிய
சேரும்அணிதிருவிழாவுகளனுதினஞ்சிறப்பொடுமன்னிய.
[சோழ.

எவ்விடம்பார்த்தாலும் நந்தனமலர்ச் சோலை
இனியகரும்பின்ரசம் பிழியும்அற்புத ஆலை
திவ்யவேதியாசோதிஷ்ட டோமயாக சாலை
சீர்சுபமங்கள வோசைநிகரும் வேலை

திகழ்தத்தையைநிகர் மொழிபெறுமடவியர்
சுகமுற்றிடுகண வரைதெய்வமெனவெணி

செறியுநாலு வருணமான அவரவர்
நெறியைமேவ அமரர்நாடு தனிலுறை

தேனும்இவிடம்வர ஆசையைக் கொண்டிடநலமிகத் தாங்கிய
ஞானநெறிகொள்ஔவைபாடியகவிகளின்மகத்துவம் ஓங்கிய.
[சோழ.

## திருச்செங்காட்டங்குடி யென்னும் நகரச்சிறப்பு.

விருத்தம்.

ஓம்மகாகணபதிவந்தரியவேதத்
துட்பொருளாம்பரமனைப்பூசித்ததாலந்
நாமமுற்றுச்சிவசமயக்குரவர்மூவர்
நவின்றதிருத்தேவாரப்பாடல்பெற்றுப்
பூமகட்கோர்வதனத்தைப்போல்விளங்கும்
புகழ்ச்சோழநாட்டுக்குவிழிபோல்நீடும்
மாமகள்வாழ்செங்காட்டங்குடியின்மிக்க
வண்மைசொல்லுவேன்துயரைவெல்லுவேனே.

தரு - இராகம் – சங்கராபரணம் - ஆதிதாளம்.

* பல்லவி.

செங்காட்டங் குடியென்னுந் திருநகரத்தினது
சிறப்புச் சொல்ல வொண்ணுமோ

அநுபல்லவி.

மங்காதொளிர்திவ்ய மணிமுடி யணிவான
வர்களும் நிதம்புகழ் மங்களா கரமான. செங்காட்.

சரணங்கள்.

வானையளாவிய மதில்சூழுங்கோவில்கள்
வாய்ந்த கோபுர அலங் காரமும் - உயர்
வாகவிளங்கும் பொன்மயமாங்கொடிக்கம்ப
மன்னும் வரிசைச் சிங் காரமும்
தேனுலாவுமணமலர்கள் அலர்ந்து நிறை
திரு ஆத்திவிருக்ஷ கெம் பீரமும்–பெருந்
தேவருங் கொண்டாடச் சிற்பவேலைகள்மேவுஞ்
சித்ரமண்டபங்கள் விஸ்த் தாரமும்

கானஞ்செய் வண்டுறை யுங்குழன் மாதுமை
கணபதீச்சுரரிடப் பாகத்திலே      யமை
வானதிருக்கோலம் பார்க்க அன்பு      பூணும்
அரனைக் கணேசர் பூசித்து மகிமை      காணும். செங்காட்.

வந்தகமகிழ்வுட னின்று சிவபத்தர்
மறையவர்வாழ்த்திச்சொல்      வேதமும் – சப்த
வாருதியோசை அடங்க அஷ்டாதச
வாத்திய முழங்கிடு      நாதமும்
சந்தவிளமுலை யரம்பையனைநிகர்
தையலர் பரத சங்      கீதமும் – தர்க்க
சாஸ்த்திரங் கலைக்கியானங் கற்றறிந்திட்டவித்
தக கவிராஜர் சம்      வாதமும்
கந்தமருவுமலர் நிறைந்திடும்      ஓடையும்
கனவுத்தியாவனங் கமழ்புஷ்ப      வாடையும்
எந்தப்பொருளுமுள்ள ஆவணங்களுந்துன்னும்
எங்குங்கல்யாணமு மங்களமு      மன்னும். செங்காட்.

வேதாத்தி யயனஞ்செய் பூசுரர்வீதியும்
மேவுந்தானதர்மக்      * கியாதியும் – புவி
வேந்தர்கள் வீதியும் சேர்ந்து வியாபாரஞ்செய்
வீறும் வைசியர்மணி      வீதியும்
ஓதும்வேளாளர்கள் தங்கியதெருக்களும்
யோகஞானமும் அனு      பூதியும் – மிக
வுற்றிடுமகத்வ ஆசாரிய ரிருக்கையும்
ஓங்கும் யாகமண்டல      வேதியும்
நாதம் நீங்காத சங்குலவு      தடங்களும்
நன்மைமேவும் அன்னசத்ர      மடங்களும்
ஓதிமம்போல்நடை மாதரொழில்      குலவும்
உத்துங்க சிகர விசித்ரமாடம்      நிலவும். செங்காட்.

---

## பரஞ்சோதியார் திரு அவதாரம்.

விருத்தம்.

செப்பியஇப்பதிதன்னிற் பூர்வமாமாத்
திரகுலத்தோர்செயுந்தவமே யொன்ருய்க்கூடி
இப்புவியிலோர்வடிவ மெடுத்துவந்த
தென்னமகத்துவசைவ நெறிதழைக்க
ஒப்பிலாச்சிவபத்தி வளர்ந்துநாளும்
ஓங்கவிருநிலத்துள்ள எவ்வுயிர்க்குந்
தப்பிலபரஞ்சோதியா ரென்றேயானந்
தஞ்செய்தார் திருவவதா ரஞ்செய்தாரே.

தரு - இராகம் – காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

திருவவதாரஞ் செய்தார் – பரஞ்சோதியார்
திருவவதாரஞ் செய்தார்.

அநுபல்லவி.

உருவமுடன் அருவம் உருவாருவமுங் காட்ட
ஒன்பதுபேதமாய்நின்றஎம்பிரான்அருள்கூட்ட. திருவவ.

சரணங்கள்.

நற்பதந்தரும்பிள்ளை யில்லையென்ற துயர் நீங்க
நவிலுந்தாய் தந்தையர் சித்தத்தில் மகிழ் தேங்க
அற்புதமாகப் பாற் கடலிற் சந்திரோதயம்
ஆகினாற்போலேதூளி தாங்க மகத்வம் ஓங்கத். திருவவ.

தேவர்பூமாரிபெய்ய வேதியர் ஆசிகூறச்
சிறியவர்களும்பர சிவனார் அன்பினில் வீறத்
தாவில்திருச்செங்காட்டங் குடியென்னுந்தலத்தினில்
சாமார்த்தியவேதசாஸ்த்ர மாமாத்திரர் ஈடேறத். திருவவ.

நாடிய தருமங்கள் அபிவிர்த்தியாய் நீட
நடுங்கிப்பாவங்கள் தலை காட்டாமலே வாட
ஆடிக்காற்றினிற்பறந் தோடுஞ்சருகுபோல
அஞ்ஞானமுற்றும்ஓடமெய்ஞ்ஞானிகள்கொண்டாடத். திருவ.

## பரஞ்சோதியார் கல்வியில்தேர்தல்.

விருத்தம்.

ஜெகமெலாமகிழவந்த சீர்பரஞ்சோதியார்தாம்
புகல்தவம்வளருந்தன்மை போலவேவளர்ந்துநன்னாள்
தகுமுபநயனமுற்றிச் சதுர்மறைக்கலைகளோதி
வகைபெறும்படைகளாதி வளமெலாந்தேர்ந்தார்தாமே.

தரு—இராகம்—கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

பரஞ்சோதியார் படைக் கலமுதலியவித்தை
பயின்றுவாழ்ந்திருந்தாரே.

அநுபல்லவி.

இரஞ்சிதமாயெங்கும் எவரும் புகழ்ந்து சொல்ல
இருவர்க்கரியபெம்மான் திருவருளாலே நல்ல. பரஞ்.

சரணங்கள்.

சதிரிலக்கணவிலக் கியந் தர்க்கமனு நீதி
சாஸ்த்ரமனுவிஞ்ஞான சாஸ்த்திரங்கணி தாதி
வதியும்பூகோளம்பொருள் நூலும்நற்சுயஞ் சோதி
வாக்யசதுர்வேதாக மங்களும்பிரக்கி யாதி
மருவியாயுள்வேத சாஸ்த்ரக்களையுங் கண்டு
பரமனார்கருணை நேத்ரவருளைக் கொண்டு. பரஞ்.

கைப்பொருள்தன்னிலு மெய்ப்பொருள்கல்வி மேலும்
கற்கக்கற்கமணற் கேணி நீரினைப் போலும்
செப்பியபேரறிவு மிகவும்வளர்வ தாலும்
ஜீவர்க்குவேறேதுணை யுண்டோவெனஎக் காலும்
தினமும்ஆசைநீடி யெவருமனங் களிக்கப்
பனகராசனும் பிளந் ததலத் தொளிக்க. பரஞ்.

தவுரிதமுதற்பஞ்ச கதியும்வளமாச் செல்லும்
தாமுள்ளபரியேற்றம் பகைவரானோரைக் கொல்லும்
நவமிகுமதயானை யேற்றமுடனே வெல்லும்
நற்படைக்கலத்தொழில் வல்லவனெனச் சொல்லும்
நயவிநோதசா துரியவிற்பன முற்று
ஜெயவல்லாசரா சாகளுமெச்சிடப் பெற்று. பரஞ்.

## காடவராஜனிடம் பரஞ்சோதியார் அணுக்கராதல்.

விருத்தம்.

இந்தவிதங்கற்றபரஞ் சோதியாரும்
இலகியமெய்ப்பொருள்யாதென் றறியவேண்டிச்
சிந்தையதிதீவரமாம் விருப்பங்கொண்டே
திவ்வியவேதாகமத்துட் பொருளையெல்லாஞ்
சந்தமுந்திருவருளை முன்னிட்டன்பாய்த்
தகுமுறையாலாராய்ந்து வினவித்தேறி
இந்துசேகரனே மெய்ககடவுளென்ன
எண்ணினார் தொண்டுசெய்ய நண்ணினாரே.

திபதை — இராகம் — சங்கராபரணம் — சாப்புதாளம்.

கண்ணிகள்.

வேதங்கள் தம்மாலும் ஓதரும்அற்புத
மேவிய ஆதார — உமைமகிழ்
நாதவிநோதப்ர போதநிராமய
நறசிவன் பாதார

விந்தமடைதலே நந்தலிலாமுத்தி
மெய்ம்மார்க்கமென நாடி — அநுதினம்
சிந்தித்திறைஞ்சியவ் வந்திவண்ணர்க்கன்பு
செய்பவர் தமைத் தேடி

திருத்தியுடன்பத்தி விருத்திபூசைசெய்துந்
திருத்தொண்டுபல செய்து — வருநாளில்
கருத்துக்கிசைந்தநற் கருத்தன்புபொறையடக்
கமுங்கற்பின்சீ ரெய்தும்

திண்காட்டுந்தங்குலங் கண்காட்டிடவந்த
திருவெண்காட்டு நங்கை — யெனுமுயர்
பண்காட்டுமொழியுடன் தண்காட்டுமலர்முக
பாக்கியவதி மஙகை

யானைவிவர்கமுஞ்சீர்பெறச்செய்துதா
யவர்போற்றவாழ் நாளில் — பழவினை
வேரினைக்கெல்லிவெந் நீளைவிட்டுக்கதி
மேவவிமலர் தாளில்

நித்தமுமனத்தைச் செலுத்துஞ்சுத்தமிகு
நேயன்மகா யோகன் — கனம்பெறு
முத்தமிழ்வல்லவன் தத்தைமொழியார்கன
மோகலாவண்ய தேசன்

விறல்பெறும்யுத்தத்திற் புறமுதுகிட்டிடா
விஜையஞ்செய் ரணசூரன் - இராஜர்கள்
திறைதரப்பெற்றுநன் முறைமையாகசெங்கோல்
செலுத்திய கெம்பீரன்

தேடரும்புகழ்பெற்ற காடவராஜன்பால்
சிலபேர்கள் பரஞ்சோதி — யார்தமக்கு
ஈடில்லைபரியேற்றத் தோடுயானையேற்றத்
தினிலென்றார் அசசேதி

நன்னயமுடன்அந்த மன்னவன்கேட்டுளம்
நாடியே தப்பாதே - வரவழைத்து
அன்னவரையணுக்க னென்னுமுத்யோகத்தில்
அமைத்திட்டான்அப்போதே

அதுமுதலாகஅப் பதிசொற்படியொன்ன
லார்தேசந் தனிற் சென்று — அவர்களின்
மதமடங்கியொடுங்கும் விதஞ்செய்துபகுதியும்
வாங்கிவருவார் வென்று

பழநழுவிப்பாலில் விழுமந்தத்தன்மைபோல்
பார்த்திபர்க்கிவர் வந்து — அணுக்கராந்
தொழில்பெற்றஜெயத்திறல் மழைபோல்அனந்தநிதி
சொரிந்துவந்தான் பரிந்து

## அரசன் பரஞ்சோதியாரை வாதாவிமீது யுத்தத்திற்குப் போய் ஜெயித்துவரும்படி சொல்லுதல்.

விருத்தம்.

நரபதிசன்மானம் பெற்றிருக்கும்நாளோர்
நாள்அரசன்பரஞ்சோதி யாரைநோக்கிப்
பிரபலமார்வடதேசந் தனில்வாதாவிப்
பேர்கொண்டமன்னன் வெகுநாளாயெந்தன்
நிருபங்கண்டும்பகுதி அனுப்பிடாமல்
நினைத்திட்டான் சுலபமதாய்நீரிப்போதே
பொருபடைகள்சூழ அவன்மேற்சண்டைக்குப்
போவென்றான் ஜெயங்கொண்டு வாவென்றானே.

தரு—இராகம்-சுருட்டி—ஆதிதாளம்

பல்லவி.

இப்போதே நீர்சென்று வாதாபிதனைவென்று
இசையுடன் வருவீரோ.

அநுபல்லவி.

ஒப்பில்லாதவீர லட்சுமிமிக வாசம்
உற்றதோட்பரஞ்சோதியாரே உத்தரதேசம். இப்போ.

சரணங்கள்.

கெடுமதிகண்ணுக்கெள் ளளவேனுந் தோன்றாது
கெர்வங்கொண்டிருக்கின்றான் பகுதியைத் தாராது
கொடுமையிலேயொரு இறகென்றால் ஏதேது
கொடுகுமா படையுடன் சமர யானையின்மீது.இப்போ.

சுறுக்கென்று கொடுக்கினிற் கொட்டினாற் றேளது
சும்மாவிருந்தாற் பிள்ளைப் பூச்சி யென் றாகுது
உறுக்கியே பலன்காண வேணுமுன் றனது
உக்ரங்கண்டாற் பயந்து வணங்குவா னுண்மையிது.இப்போ.

கைத்திறலுடன்படைக் கலத்திறத்தையுங் காட்டிக்
கருதலர்களைத்தலை காட்டாமலே யோட்டி
எத்தலமும்புகழ ஜெயஸ்தம்பந் தனை நாட்டி
இலங்கிய பரஞ்சோதி யாரொன் றுயர் கிரீட்டி.இப்போ.

## வாதாபிமன்னனுடன் பரஞ்சோதியார் போர்புரிதல்.

விருத்தம்.

மன்னனிவைசொல்ல விடைகொண்டனுக்கர்
 மால்யானைமீதேறிப் படைகள்சூழத்
துன்னும்வாதாபிநகர் சேர்ந்தேகோட்டைச்
 சுவரிடியரணபேரி யறையச்செய்ய
பன்னியவாதாபிசில சேனையோடும்
 படையானைமீதேறி வந்துநிற்க
அன்னஇருவோர்களுந்தம் வீரத்தன்மை
 அடுத்திட்டார்போர்புரியத் தொடுத்திட்டாரே.

---

## பரஞ்சோதியாரை வாதாபிமன்னன் சரணடைதல்.

விருத்தம்.

இருதிறத்தோரும் பகைமிகக்கொண்டே
 எதிர்த்தமர்புரிய வாதாபிக்
கெறிதிரைக்கடல்போ லிருந்தசேனைகளும்
 ஈடழிந்தொழிந்து பின்னிடசீர்
கருதுறுமனுக்கர் தாம்ஜெயம்பெற்றாக
 கதித்திடஅந்நகர் மன்னன்
கலக்கமுற்றுள்ளம் நடுங்கிநாம்பகுதி
 கட்டிடா திருந்ததினாலே
விருதழிந்தலைய லாச்சுதென்செயலாம்
 வென்றிசேர் அக்குணவானை
வெகுவிதவணக்கஞ் செய்திணங்குதலே
 மேலென அனுக்கர்தம்பதத்தை
ஒருதனிமனதாய்ப் பணிந்துநம்பகுதி
 யுளதெலாந் தடங்கலில்லாமல்
உவந்தளித்திடுவேன் எளியன்மேல்நின்றன்
 உளமிரங்கெனப் புகலுவனே.

தரு-இராகம்—அசாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாபரஞ்சோதியாரே—இவ்வேழைக்கு
அனுக்கிரகஞ் செய்வீரே.

அநுபல்லவி.

கையாம விதுவேளை காப்ப துமது பாரம்
கந்தமலர்ப் பதத்திற் காயிரங்கோடி நமஸ் காரம். ஐயா.

சரணங்கள்.

பிசகாது நீர்சொன்ன சொலைத்தள்ளி வீரியம்
பேசிச் சமாக்குவந்து தோற்றுக் காம் பீரியம்
இசைகொள்சரணடைந்தேன்கோபிப்பதா காரியம்
ஏர்த்திடும் அயையாஸ்தந் தருதல்லவூ தாரியம். ஐயா

ஈயைப்பிடித்தால்தலை இறகு காலகை வேறு
என்பார் அதுபோலென்றும் இருக்கச்செய்தீரிவ் வாறு
ஏயஅடிதத கையா லணைக்கவேண்டுங் கூறு
இதங்கி ஆளாவிடில் வருமுமக் கவ தூறு. ஐயா.

நிழல்விட்டு வெளிவந்தாற் றெரியுங்கோடையின் வெப்பம்
நீக்கவேண்டுமென்றன் மனத்தி லுள்ள குழப்பம்
பழையபடிக்கவ்விடம் வந்து சேருமென் கப்பம்
பார்த்திப னிடத்தினிற் சொல்லியென் விண் ணப்பம். ஐயா.

---

## பரஞ்சோதியார்பகுதிமுதலானதும்வாங்கிக்கொண்டு திரும்பிவருதல்.

விருத்தம்.

வாதாபிமன்னன்இந்த வண்ணம்விண்ணப்பஞ்செய்து
மாதானம்பொழியும்யானை மாப்பரிநிதிகள்தந்து
பாதாரவிந்தந்தன்னிற் பணிந்திடவிரங்கிஅன்னோன்
மீதார்வந்தந்தணுக்கர் விரும்பினார்திரும்பினாரே.

தரு-இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயமுடன் வந்துசேர்ந்தார் - யாவருங்கண்டு
சிந்தைமகிழ்ச்சி கூர்ந்தார்.

அநுபல்லவி.

வயமிகும் வெற்றி மாலை
வனைந்த பரஞ் சோதியார். ஜெய.

சரணங்கள்.

வல்லோர் புகழும் வட தேச மதனிற் பண்டு
வரவேண்டிய பகுதி யுடனே அளவு கண்டு
சொல்லரிய நிதிகள் பரியும் யானை திரண்டு
சூழ வாதாபியஞ்சித் துதித்திட விடை கொண்டு. ஜெய.

சந்த்ரவட்டக் குடைகள் நிழற்றச் சாமரை போடச்
சதிர்பெற் றிலங்கும்பல விருதுக்கொடிக ளாடத்
தொந்தமுடனே பராக் கென்று கட்டியம் பாடத்
துலங்குமாகதர்வந்து புகழ்ந்து மிகக் கொண்டாட. ஜெய.

சக்ரவாளகிரிப் புவனந்தனி லாதியார்
சங்கரர்பதத்தைத்தியா னிக்கும்அநு பூதியார்
விக்ரமவீரனென்று வீறும்பிரக் கியாதியார்
விளங்குங்காடவர்கோனுக்கிசைந்தபரஞ் சோதியார். ஜெய.

---

## காடவமகாராஜன் பரஞ்சோதியாரைப்புகழ்தல்.

விருத்தம்.

கனமுடனேவந்தபரஞ் சோதியாரைக்
காடவர்கோனும்மகிழ்ந்து கனகசிம்மா
சனமதனிலிருத்திஅடை யலராம்வெங்குஞ்
சரமதமெலாமடக்கி வெற்றிமாலை
தனையணிந்துபகுதிமுதற் கொண்டுவந்த
சவுரியசிம்மப்பிரபல தீரனென்றே
வினயமொடும்உமக்கிணையா யாரைநான்சொல்
வேனென்றான்வேறிலைநீர் தானென்றானே.

தரு-இராகம்-பியாகடை-ரூபகதாளம்.

பல்லவி.

உமக்குநிகராயெவரைச் சொல்லுவேன்
உன்றுணையில்லாமல்
உறும்பகைவரைநானோ வெல்லுவேன்.

அநுபல்லவி.

இமைக்குஞ்சந்த்ர முக விலாச
இனியபிரபல சுகுண நேச
சமஸ்த்தபுவியும் மதிக்கும்பிர தாபரோ
சாரும்பாஞ்சோதி யெனுஞான தீபரோ. உமக்கு.

சரணங்கள்.

சண்டைக்கென்றுனுள மயங்கியேமிகத்
தத்தளிப்பார்சிலர்ஓது - மும்மைச்
சமர்க்குசசெல்லவே யோசித்தனுப்பிடச
சாற்றப்பகைவர்மேல் வாது
அண்டவேசென்றும தாண்மையைக் காட்டி
அகத்தையடக்கி ஜெயஸ்தம்பம் நாட்டி
கொண்டுவரும்புகழ் மேவுஞ்சிங் காரரோ
கோலாகலப்பிரபு டகவொய் யாரரோ. உமக்கு.

துஷ்டருக்குக்குரு பீடமகாபல
துஷ்டனுமந்த வாதாவி - போரிற்
றேற்றிட்டுவந்திந்த வேளையாளுமென்று
சொற்சரணகதி மேவி
இஷ்டங்கொளஅவை யந்தந்து காத்து
இயானைமுதற்கொண்டு வந்திங்கு சேர்த்து
சிஷ்டர்மகிழ்ந்திட வோங்கிடும நீதரோ
திவ்யசேனாபதி யாகும் விநோதரோ. உமக்கு.

கீர்வந்தபின்பெந்த னுள்ளத்தின்அச்சமும்
நீங்கியேமென்மேலும் - பல
நீடுதேசங்களுங் கைவசமாசசுது
நேர்புவனம்பதினாலும்
ஆர்வமுடன்துதி செய்யுஞ சுசீல
ஆனையேற்றத்திறங் கூர்பரி பால
சீரவளர்விப்பிர வம்ச சிரேஷ்ட்டரோ
தெள்ளும்வேதக்கியானம் உள்ள அபீஷ்ட்டரோ. உமக்கு.

---

## காடவராஜனுக்குப் பரஞ்சோதியார் பெருமையை மந்திரிகள் எடுத்துரைத்தல்.

விருத்தம்.

இவ்விதமாவிறல்பெற்றோங்கும் எழிற்பரஞ்சோதியாரைப்
புவனராஜேந்த்ரன்சொல்லிப் புகழ்ந்திடக்கேட்டே இந்தச்
சிவனடியார்தந்தன்மை செப்புதற்கெளிதோவென்று
தவமிகுமந்திரிமாருஞ் சாற்றுவார்போற்றுவாரே.

தரு-இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுவோம்எங்கள் ராஜ ராஜேஸ்வரா-அதி
சுகுணவிபவ ஜெய பாஸ்கரா.

அநுபல்லவி.

வல்லயானைகள்நாளுந் தாங்குந்திசைக ளெட்டும்
மதிக்கும்பரஞ்சோதியார் மகிமைதெரிந்தமட்டும்.சொல்.

சரணங்கள்.

அசகாயசூரராம் அணுக்கரில்வெகு பேரை
அனுப்பினோம்வடதிசை யாராகிலும் போரை
இசையொடுநடத்தியே இசைகொண்டுவந்திட் டோரை
இயம்பும்நிதியுடன்வந் திலங்கிடுமிவர் சீரைச.சொல்.

அணியும்விபூதி ருத்திராட்சமெய்யில் திகழ
அன்பரைநாளுஞ்சிவ னென்றேயுள்ள நெகிழப
பணியும்ஆகமபத்தி பதிந்ததொண்டர் மகிழப்
பரவும்இப்புண்ணியர்தம் பெருமைகேட்டுப் புகழச்.சொல்.

சந்த்ரசேகரஜடா தரர்க்குண்மைத் திருத் தொண்டு
தனைச்செய்துவருநதிவ்ய தன்மையாறபயம் விண்டு
இந்தச்சுசிலரை யிவ்வுலகினிற் கண்டு
எதிர்த்துயுத்தஞ்செயவோர்களில்லைநன்மனங்கொண்டு.சொல்.

## பரஞ்சோதியாருக்கு அரசன்நிதிமுதலிய அளித்து அவர்பதிக்கேகும்படி விடைதருதல்.

விருத்தம்.

மந்திரிகள் இந்தவிதம்-அரசன்றன்பால்
மதித்திவர்தஞ்செயலெல்லாம் எடுத்துரைக்க
அந்தமன்னன்கேட்டஞ்சி நடுநடுங்கி
அனற்பட்டமெழுகதுபோல் மனநெகிழ்ந்து
சுந்தரஞ்சேரிருவிழியிற் சோகபாஷ்பஞ்
சொரிந்திடவேஐயையோ என்னபாவம்
நிந்தனைக்கோ இடமானே னென்றுதன்னை
நிந்திப்பான்பலவிதமுஞ் சிந்திப்பானே.

திபதை - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

சுத்தபரிபூரண நித்யப்பொருளாமன்னுஞ்
சோமசேகரன்பாதத் தொண்டு - செயுஞ்
சுக்யானர்களித்திட் முக்யநல்லமுதிடுஞ்
சுபகரத்தொண்டுசெய்து கொண்டு.

வஸ்துநிச்சயமுற்ற பத்தரையெளிதாயென்
மனதிலோர்அணுக்கரா நினைத்தே - பகையுள்
வைத்தவர்செய்யுங்கன யுத்தமுனைதன்னிற்பின்
வரும்வினையறியாமல் வைத்தே.

இருந்ததுபெரும்பாவந் தெரிந்திட்டாலெவர்களும்
இதற்குடன்படாரொமை யாளும் - இவர்
இருப்பாநீறுபூத்திட்ட நெருப்பாயிருந்ததைநான்
எள்ளளவுமறியாமல் நாளும.

பரிந்துசண்டைக்குநீர் வருந்தாமறபோமென்றுென்றும்
பாராமலே விடுத்தேனே - சொல்லிப்
பாரினிலொருவராற் றீராதபெரும்பழி
பாவத்துக்குடம பெடுதேனே.

கதிதருமெம்பிரானைத் துதிசெய்தொண்டர்பெருமை
கழறவெளிதோவென்பார் பொய்யோ — எந்தன்
காலவித்யாசந்தானே மேலாஞ்சிவசங்கரா
கலஙகுதேசித்தமும் ஐயையோ.

நிதமுஞ்சிவனடியார் பதமலர்பூசிக்கும்
நெறியுள்ளோனெனப்பெயர் பெற்று — சுத்த
நீரினிற்குளிக்கப்போய் சேறுபூசிக்கொண்ட
நீர்மையாச்சுவெறுமை யுற்று.

எனவிந்தவண்ணமா மனதுநொந்துபிரலாபித்
தெதிரநிற்குமந்திரிகளை நோக்கி — எனக்கு
எண்ணும்புகழினுடன் புண்ணியமும்நண்ண
விருந்தநீங்களேதுய ராக்கி.

கனநரகினில்விட மனதிலெண்ணியோஇந்தக்
கார்யத்தைவெளியில் விடாது — செய்யாக்
காதகனுசெய்துநன்றுய்ச சாதித்துவிட்டீர்உம்மைக்
கனவினும்நம்பப் படாது.

ஆதியேயித்தன்மையொன் றேதாதிருந்தின்றைக்கு
அறிவித்தல்மதி மந்திரிமாரோ — ஒருவர்க்
கரவுதீண்டுமுன்தடுக் காமல்நஞ்சேறியபின்
அதனைமந்திரிப் போரானீரோ.

நீதிதேர்ந்திடும்உங்கண் மீதினுங்குறையில்லை
நிஷ்ட்ரேத்திற்பல னீடாதே — யாரும்
நினைவோடவரவர்தம் வினையனுபவியாமல்
நெட்டித்தள்ளுதற்குக் கூடாதே.

இம்மாநிலத்திலொன்றுஞ சும்மாநடக்கமாட்டா
தெல்லாஞ்சிவன்செயல்தா னென்று — சொல்லி
எதிரில்நிற்குநதள பதிபரஞ்சோதியை
இனிதுநோக்கிச்சொல்வார் ஒன்று.

அம்மான்மழுவேந்தும் பெம்மானுகந்ததொண்டர்
ஆமென்றறிந்திடாமல் நேரோ - பிழைக்
காளாயினேன்பூமி வெட்டினோர்க்குத்தண்ணீர்
அளித்தல்போல்பெரியோ ராவாரோ.

அருள்செய்தல்கடமையாந் தெரியாமற்செய்தபிழை
யனைத்தும்நீர்பொறுத்திட வேணும் - என்றே
அஞ்சலியஸ்த்தனுகிக் கஞசமலரடியில்
அன்பாய்வணங்கஅருள் பூணும்.

பரஞ்சோதியாருமவ் வரசனைநமஸ்க்காரம்
பண்ணிமகாராஜ ராஜ - சேகரா
பழகிடுமெனனுரிமைத் தொழிற்கடுத்ததைச்செய்தேன்
பழியுமக்கேதென்றிவர் பேச.

மந்திரிகள்பெரியோர் அந்தச்சபையிலுள்ள
மற்றோரும்அரசனை நோக்கி - நீரும்
மனதறிந்துசெய்ததே யல்லவோர்போதுங்குற்றம்
வாராதென்றவன்அசசம் நீக்கி.

சிந்தைதெளிவித்தலுந்தெளிந்துமுகமலர்ந்து
திகழ்பரஞ்சோதியார்ககவ் வேந்து - கிளஞ்
சேரும்பூஸ்த்திதிகளுஞ் சீர்கொள்நிதிக்குவையுஞ்
செப்பும்ஏவலாளரும் ஈந்து.

மேன்மைசேர் உம்முடைய பான்மைநானறியாத
விதந்திருத்தொண்டுசெய்து வந்த - நீரும்
வியந்தெந்தனுக்குப்பணி செயவேண்டாம்இதுமுதல்
வெளிப்படையாகவே முந்த.

கூன்மதிச்சடையார்க்கும் ஊனமில்அன்பருக்குங்
குறித்ததொண்டுசெயவே சொல்லி - விடை
கொடுக்கவுத்தரம்பெற்று இடுக்கமெவர்க்கும்நீக்கும்
கோகநகமாமலர் வல்லி.

நிதமுமருவிய தம்பதிசெங்காட்டங்குடி
நேர்மையுடனேவந்து சேர்ந்து – நல்ல
நெறிப்படிக்கணபதீச சரத்தில்வாழ்விமலனை
நித்யப்பிரதக்ஷணஞ்செய் தார்ந்து.

துதிசெய்துபணிந்தருந் ததிநேர்மனைவியுடன்
சொல்லும்இல்லறத்தினை யாண்டார் – வருந்
தொண்டர்க்குமுன்னிலும் எண்மணங்கதிகமாத்
தொண்டுசெய் திருப்பணி பூண்டார்.

## சிறுத்தொண்டநாயனார் திருத்தொண்டுசெய்தல்.

விருத்தம்.

நீறுபுனைசிவனடியாரெந்தநாளும்
நினைத்தபடிதிருவமுதுகொள்கவென்றே
கூறியழைத்திடுதலொப்பவிளங்கும்அன்னக்
கொடிதனதுமாளிகைமுன்னாட்டியன்பர்
தேறுமனமகிழ்ந்திடமுன்னமுதுகொள்ளச
செய்துதாம்பின்னுண்ணுநியமங்கொண்டு
பேறுபெறும்பரஞ்சோதியாரும்அன்பிற்
பெருகுவார்திருத்தொண்டுபுரிகுவாரே.

தரு–இராகம்–கல்யாணி–ஆதிதாளம்.

பல்லவி.

சிவனடியவர்கட்குநவமுடன்அமுதிடுந்
திருத்தொண்டுசெய்வாரே.

அநுபல்லவி.

புவனந்துதிக்கும்வேதபாரகபூ தேவர்
புகல்பரஞ்சோதியாரென்னுமகானுபாவர். சிவனடி.

சரணங்கள்.

தினமும்விடியற்காலந் தன்னிலெழுந்துதிவ்ய
தீர்த்தமாடியனுஷ்ட் டான - மந்த்ர
ஜெபதபமுடித்துகொண் டன்பாகவேகணப
தீச்சரம்வாழுந்தெய்வ மான

பனகபூஷணஉத்ரா பதியீஸ்வரர்மலர்ப்
பாதம்வணங்கித் தியான - மிகப்
பரவியறுசுவைப்ப தார்த்தஅமுதும்நள
பாகமாகச்செய்துநி தான

மனங்கொண்டசிவனன்பர் வரும்வழிஎதிர்நோக்கி
வண்டாமரைபோல்முகமலர்ந்தானந்தந் தேக்கி
இனிமையாய்வரவழைத்தன்புமிகவும் ஓங்க
இதையங்களிக்கவந்தோர் உதரவெம்பசி நீங்கச். சிவனடி.

சீருடன்அழைத்துவந் தாதனத்திருத்தியிச்
சிறுகுடிலென்னசி லாக்யம் -- பெறச்
செய்ததோசுவாமிகள் திருவடிதெரிசிக்கச்
சென்மங்கள்தோறும்நான் பாக்யம்
ஏருறப்பெற்றிருந்திட் டேனேஅடியேனென்
றிலங்கும்அவரவர்தம் வாக்யம் - தன்னால்
இனியக்ஷேமங்களும் நன்றாய்விசாரித்து
இதையங்களிக்கஆ ரோக்யம்

ஆரும்நற்போஜனம செயதிடவெகு நேரம்
ஆய்விட்டதென்றுண்மை யாகச்செய்துப சாரம்
காரிகைவெண்காட்டு நஙகையுடன் உவந்து
கருதும்இப்பணியேதன் விரதமாகச் சிறநது. சிவனடி.

இளவாழையிலைதனைச சுற்றிவருக்கமாக
இனியவளமும்பரி மளமும் -- நன்று
யிசைந்தஅறுசுவைபப தார்த்தம்பலபச்சடி
இயானைஅடிபோலஅப் பளமும்
விளங்குந்திருவமுதும் பருப்பும்புத்துருக்குநெய்
விதமிகுங்கதம்பதப் பளமும் - இன்ப
மேவும்பாற்குழம்பாமை வடைபோளிசுகியனும்
மிககமாதுரியமுப் பளமும்

தெளிவுறுமிலட்டுகம் பணியாரம்வடை தோசை
தேன்குழல்இட்டளி சீர்மனோகரம் ஆசை
கொளுந்திவ்யஅதிரசம் பாயசத்துட னேர்சக
குலவுங்கட்டித்தயிரும் பரிமாறியே தீர்கக. சிவனடி.

அண்டத்தமரர்களும் இந்தநல்லமுதுண்ண
அகத்தெண்ணிநாவில்நீர் ஊற - யார்க்கும்
அளைக்காசுமியாத உலுத்தர்கள்தலைகுனிந்
தங்கம்நடுங்கிநிலங் கீற
உண்டவர்மனங்களித் திந்தொண்டர்புண்யம்போ
லுண்டோவென்றுயர்புகழ் கூற - என்னை
உவந்தாளுந்திரிபுர சுந்தரிபாகததில்
ஓங்கும்பரனுக்கருள் மீற

தொண்டர்முன்சிறியராய் ஒழுகுநடையாற் சிறுத்
தொண்டரென்றெவர்களும அழைத்திடப்பேர்பெறு
மொண்டவப்பரஞ்சோதி யாருந்தீவினை யேக
ஒருநாளுங்குறையாமல் சரியாயிவ் விதமாகச். சிவனடி.

---

## பிள்ளைவரங்கேட்டல்.

விருத்தம்.

இன்னவகைசிறுத்தொண்டர் திருத்தொண்டன்பா
யியற்றிவருநாளினில் வெண்காட்டுநங்கை
யென்னுமுயர்மனைவியார்தாமும்பிள்ளை
யில்லாததுயரடைந்துகணபதீசர்
சன்னிதிமுன்னின்றுமிகவணங்கியெங்கள்
சஞ்சலமென்னென்றுரைப்போமகருணைகூர்ந்தே
மன்னியபுத்திரபாக்யம்அருளிச்செய்கு
வாயென்பாளெம்பெருமானேயென்பாரோ

தரு-இராகம்-காபி-ஆதிதாளம்

பல்லவி.

அருள்செய்யவேணும் அய்யா - புத்திரபாக்யம்
அருள்செய்யவேணும் அய்யா.

அநுபல்லவி.

தெருள்செய் நால்வேதமும் உரைசெய்மகானுபாவா
திவ்யகணபதீசசு ரம்வாழுந்தேவதேவா. அருள்.

சரணங்கள்.

செய்ததீவினையாதோ — ஏழைகள்மேற்
சித்தமும்இரங்காதோ
வைதேமலடனெனும் வசைச்சொலானதும் நீங்க
வாழையடிவாழையைப போலஎங்கள்குலம் ஓங்க. அருள்.

ஸமந்தனில்லாதவாழ்வு - தனையெண்ணிடில்
வாழ்வாமோமிகத்தாழ்வு
சிந்தைநயனஞ்செவி தேகமுமின்பங் கூட
செய்தவம்பலித்திட்ட தெனயாருங்கொண் டாட. அருள்.

அனயர்தங்குறைநீக்கி - யாருங்கிர்பை
யாளரோஅருள்தேக்கி
உன்பதந்தொழவுமக் குவந்தபிளளையாய் வீற
ஒருமையாய்ஆட்செய்து பெருமையாய்கடைத்தேற. அருள்.

---

## புத்திரனைப்பெற்றுவளர்த்தல்.

விருத்தம்.

எனநிதமுங்கணபதீச்சரத்தின்மேவி
எந்தையையென்கண்மணியையிறைஞ்சியேத்தி
வினயமுடன்தொழுதுவரஎம்பிரான்றன்
மிகுகருணையாலேவெண்காட்டுநங்கை
தனதுதிருவயிற்றினிலோர்கருபபமாகித்
தகுதேவதுந்துமிகள்முழங்கநன்னாள்
மனமகிழும்பாலசூரியன்போற்பிள்ளை
மகித்தலகுதுதித்திடவேஉதித்ததாமே.

திபதை — இராகம் — சவுராஷ்டிரம் — அடதாளம்.

கண்ணிகள்.

சந்த்ரஜடாதர சங்கரன்கருணையால
சர்வலக்ஷணங்களும் உளள — புதரன்
வந்துதிக்கமிக்க சீர்பெற்றெளிருஞ்சுற்ற
மானோருமகிடசியைக கொள்ள.

மாதாவுந்தனதிரு கண்களித்திட நோக்கி
மாமகிழ்வுள்ளத்திற நேங்க - சதுர
வேதாத்தியாயவொலி ஆகாயத்தினுஞ்சென்று
மேவமங்கலவாத்யம ஓங்க.

செய்யாடல்சிறப்பாந்தச செங்காட்டங்குடியெங்கும்
நிறையசசிறுத்தொண்டர் என்னும் - எங்கள
அய்யாபரமபதி கிாபைையெண்ணியெண்ணி
அன்புமிகக்கொண்டு பின்னும.

வேதியர்தங்களின் விருப்பமடங்கவே
வித்துமுதற்பல தானம் - தினம
நீதமுடனளித்துச சிவனடியவாசட்கும
நிதியளித்துசசிவத யானம.

மேவுந்தங்குலத்தினுக் குரியசடங்கெல்லாம
விதிவழுவாமலநாள பத்து - வரை
தேவர்புகழசசெய்தக் குழந்தைக்குசசீராள
தேவனென்றிடுபெயா வைத்து.

வாசநீராட்டிப்பூந் துகிலில்மெயதுவட்டியே
வளாநிலப்பொட்டுப பாராட்டி - நெற்றி
தேசுறுந்திருநீற்றுக் காப்பணிந்தன்பாகத்
திவவியமுலைப்பாலும் ஊட்டி.

பளபளெனவொளிருங்காப பணியுடன்கிண்கிணிப்
பணிதிருப்பதங்களில் சாத்தி - இடையில்
தளதளென்றிலங்கும்பொன் அரைநாணசதங்கையுந்
தரித்துக்குலதெயவத்தை ஏத்தி.

மிஞ்சுமபொன்மணிவளை கரத்தினிலும்வயிர
மின்னுமமோதிரமவிரல தனிலும - நல்ல
பஞசாயுதமரத்ந பரணஞசரபபணிகள
பதககமுத்துசசரமார் பினிலும.

## சரித்திரகீர்த்தனை.

குதம்பையணிந்துனக் காதினிலுமன்னக்
கோலரத்தினச்சுட்டி யாட — மயிர்
அதன்றகட்டியேதொங்க விட்டுசடைபில்லை
யாதியாபரணமும் நீட.

அலங்கிர்தமிசசெய்து தமதுதேகம்புள
காங்கிதத்தால செறித்து — உயர
நலம்பெறஉசசிமோந் தனைதநுமுததமிட்டு
நனமைபெருகத திருஷ்டி கழித்து.

செம்பொற்றொட்டிலிலேற்றி தேடுதமகரிதான
செலவமேபேரின்பச சதிரோ — சுதத
விம்பமதியேயென்றுமவெபபஞ்செய்யாதொளி
விளங்குங்கிரணசெங கதிரோ.

மைந்தனில்லையென்ற எங்கள்மனோதுககம
மாறறவந்தசிந்தா மணியே — திவ்ய
சுந்தரமேமணித் தீபமேயமுரித
துரோமேயிருந்தநல மணியோ.

எனவிந்தவண்ணமாயத தாலாட்டிசீராட்டி
இருகைகொட்டிநிலவைக காட்டி — ஆண்டில்
தனதாய்முபபழமபாலுங கூட்டியேஅன்னபரா
சனஞ்செய்துஅருமை பாராட்டி.

ஒருவர்ககொருவராவாங்கிக கொஞ்சிககுலாவியே
ஒளிர்மடிமீதினில வைதது — மெததக
திருத்தமிலாவிளங குதலைச சொறகளைககேட்டு
செவிகுளிர்ந்தே யிதையததது.

தம்மையுமறியாத சந்தோஷமேலிட
தஙகளைபபுனிதர்க ளாகக — வந்த
செம்மையோர்தருமத்தை வளர்பபதுபோல்நாளும்
சீராட்டியேபாது காக்க.

மன்னுங்கொன்றைமலர் கரந்தையணிசடையில்
மதியொடும்பெண்ணை சுமந்தார் - அருள்
என்னாநிதமும்வளர்ந் தணிபெறும்வீதியில்
எழில்விளையாட்டில் அமர்ந்தார்.

---

## சீராளதேவருக்கு வித்தியாரம்பஞ்செய்தல்.

விருத்தம்.

திருவிளையாடடினிலமர்ந்தசீராளர்க்குத்
திகழ்மூன்றும்வயதினிலுற்றுருவக்க
மருவுசவுளக்கிரியையென்னுமுக்ய
மங்கலமுஞசெய்துகற்புக்கரசியான
தெரிவையொடும்நிறைதவத்துத்தொண்டர்தாமுஞ்
சீர்பெறவேஉபநயனஞ்செய்துநன்னாள்
தரமிகும்ஓர்ஆசிரியர்தமைகொண்டிங்கி
தஞ்செய்தார்வித்யாரம்பஞசெய்தாரே.

தரு-இராகம்-பியாகடை-ரூபகதாளம்.

பல்லவி.

வித்யாரம்பஞசெய்தார் - அழகினில்
வேளைவென்றசீ ராளதேவர்க்கு
வித்யாரம்பஞ்செய்தார.

அநுபல்லவி.

சுத்தசரஸ்வதி யோக
சுபநட்சத்திரமு மாக
வைத்தலக்கநமது கூட
மாதேவரருள நீட, வித்யாரம்பஞ்.

சரணங்கள்.

பரிமளநீரில் மங்கலஸ்த்தாநம்
பணிவித்துநீறு புனைந்தே
மருவும்ஆபரணஙகளைப் பூடடி
வஸ்த்திரம்அரையினில் வனைந்தே

தருமிதுதியென வோர்ந்து
தாய்தந்தையர்களி கூர்ந்து
பொருள்விதரணமாப்பிர. போத
புராணவேதகலைக ளோத.வித்யாரம்பஞ்.

சோதிபரவியஐங்கரமூர்த்தி
துணையடிமனம் பதித்து
தாதிலங்கும்வெண்கமலமேவுஞ்
சரஸ்வதிபதந் துதித்து

மேதகுவிதிபிச காது
விதைகளாகும்நெல்லின் மீது
ஆதியெழுத்ததனைத் தீட்ட
ஆசிரியர்சொல்லிக் காட்ட.வித்யாரம்பஞ்.

சதுர்மறையுணர்அந்தணரன்பர்
தாமும்வாழிசொல்ல உய்யவே
அதிபுகழ்கொளுமஉறவினர்யாருமு
ஆசீர்வசனம் செய்யவே

சுதர்கள்செயங்கொண் டாட
சுபமாதர்மங்கலமும் பாட
வித்விதவாத்தியங்க ளோங்க
மேதாவிகள்மகிழ்வி ஞேங்க.வித்யாரம்பஞ்.

---

## திருஞானசம்பந்தசுவாமிகள் வருகின்றனரெனக்கேட்டு சிறுத்தொண்டநாயனார் மகிழ்தல்.

விருத்தம்.

சீராளர்க்கிந்தவிதம்வித்தியாரம்பஞ்
செய்திடக்கல்விகள்கற்றுவருநாள்காழி
யூராளியென்னுஞ்சம்பந்தமூர்த்தி
ஓங்குசிவஸ்த்தலங்கள்தரிசிக்கவேண்டி
ஏராளத்தொண்டர்திருக்கூட்டஞ்சூழ
ஈங்குவருகின்றனரென்றுரைக்கக்கேட்டுத்
தாராளமுளளசிறுத்தொண்டர்அன்பு
தாவினர்மனமகிழ்ச்சிமேவினரே.

# சிறுத்தொண்டநாயனார் திருஞானசம்பந்தசுவாமிகளை எதிர் கொண்டுபோய் தமது பதிக்கு எழுந்தருளும்படி வேண்டுதல்.

விருத்தம்.

அளவிலமகிழ்வுறுசிறுத்தொண்டநாயனாரும்
அடியவர்கள்சிலருடனசென்றணைந்தங்கேகல்
வளமுடையதிருக்கூட்டத்திடையிற்காழி
வள்ளலாரைக்கண்டுள்ளுருகித்தேக
புளகிதமுற்றானந்தபாஷ்பங்கண்ணிற்
பொழியவிருகரஞ்சிரமேற்குவித்துச்செய்ய
தளகமலததாளவணங்கிஜெனனவாரி
தாண்டுவாராஅவர்வரவைவேண்டுவாரே

தரு—இராகம—பைரவி—ஆதிதாளம்.

பல்லவி.

எழுந்தருளிவரவேண்டும்எமபெருமானே
எனமேல்தயவுகூர்ந்துதானே.

அநுபல்லவி.

செழுந்திருத்தொண்டர்கள்சூழ்ந்திடநலமெண்ணிச
செங்காட்டங்குடியென்னும் பதிக்குகிர்பைபண்ணி. எழுந்.

சரணங்கள்.

தன்னிகரில்லாத தேவரீர்பதங் கண்டு
தரிசனஞ்செய்துகண் களித்திடவே பண்டு
என்னமாதவங்கள்செய் தேனோநான்திருத் தொண்டு
ஏற்கச்செய்துபணிக் கிடத்திருவுளங் கொண்டு. எழுந்.

சகரராலுண்டாமிக் கடல்சூழ்புவியில மிக்க
தாரிதத்திரன்புதையல் கண்டதுபோற நக்க
மகிழ்வுடன்கண்டேன் அகவிருளை விலக்க
வளருநிர்மலசிவ ஞானநெறிபோ திக்க. எழுந்.

அகிலமெல்லாம்பெற்றாள் முலைப்பாலுண்டருள்மெய்ய
அங்கணர்க்கன்பாய்த்தே வாரம்பாடித் துய்ய
புகழ்பெறும்ஆனந்தக் கடலேஅடியேன் உய்ய
பூரணமானக்டாக்ஷ வீக்ஷணரு செய்ய. எழுந்.

---

## திருஞானசம்பந்தசுவாமிகள்
## தேவாரப்பதிகம் திருவாய்மலர்ந்தருளுதல்.

விருத்தம்.

முதுபுகழ்சசம்பந்தனாயிவ்வண்ணமாக
முயன்றழைக்கக்கணபதீச்சரத்திலவந்து
சதுாமறையின்பொருளானமஸ்க்கரித்துத்தொண்டர்
தககசோடசவுபசாரங்கள்செய்ய
இதையமகிழ்வுடனவர்தம்மாளிகைக்கண்
எழுந்தருளிஅன்புபெறஅமுதுங்கொண்டே
பதிகமதில்சிறுத்தொண்டர்தமைக்கொண்டாடிப்
பாடினார்ஆனந்தம்நீடினாரே.

தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

தேவாரப்பதிகம் பாடினார்
திகழும்புகலிவந்த மகிமைமிகுசம்பந்தர். தேவாரப்.

அநுபல்லவி.

ஓவாதபுகழ்கொள்செங் காட்டங்குடியமரும்
உஜிதஞானபரி பூர்நவகண்டித
நிஜசொரூபஅரன் மீதினிலற்புத. தேவாரப்.

சரணங்கள்.

மனதினிலன்புகொண்டு வாசிப்போர்வினை தீர
வாய்மைதிகழும்பர மானந்தவெள்ளம் ஆர
கனகமேருவில்லி செவியுளங்களி கூர
காம்பிரகமண்டல தாரியாம்ஆ தார
கமலநான்முகனு மோதருமறை தன்னின்
அமலமேவுமொழி யாலதொடுத் தின்னிசைத். தேவாரப்.

மலையடிகள் நூல்

சைவமென்னுஞான சூரியன்தழைத் தோங்கச்
சமணமதமாஙகங்குல் தலைகாட்டாமலே நீங்க
மெய்வளர்சிவனன்பர்க் கானந்தமுள்ளந் தேங்க
வேறும்புறச்சமைய வாதந்தலைகெட் டேங்க

வியந்துமாமுனிவர் போற்றிசெய்யப் பெரு
நயங்குலாவுவே தத்தமிழாந் திருந். தேவாரப்

மலைகலங்கினும்நிலை கலங்காதகுண சீலர்
வானோர்க்கரியசிவ ஞானதீர்க்கவி சாலா
பலன்தருஞ்சிவனடி யார்களுக்கனு கூலர்
பாரினில்மேலாம்அன்ன தானஞ்செய்பரி யாலா

பவமிலாதசிறுத் தொண்டர்செய்திடு சுத்த
தவமுலாவுதிருத் தொண்டுதழைய வைத்த. தேவாரப்.

---

## பரமசிவன் வயிரவமூர்த்தங் கொள்ளல்.

விருத்தம்.

திருப்பதிகம்பாடியருளியசம்பந்தர்
சிலகாலம்அவருடனேபயின்றுநீங்கா
விருப்பமுடன்மற்றசிவஸ்த்தலங்கள்காண [லாம்
விடைகொண்டார் சிறுத்தொண்டர் செயுந்தொண்டெல்
ஒருப்படஇவ்வுலகத்தாருணர்ந்தேவுய்ய
உள்ளத்திற்கொண்டருளிவிளங்கும்வெள்ளிப்
பருப்பதத்தில்வாழ்தேவதேவர்தாமின்
பங்கொண்டார்வயிரவமூர்த்தங்கொண்டாரே.

தரு-இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

வயிரவமூர்த்தங்கொண்டார்-கயிலாசவாசர்
வயிரவமூர்த்தங்கொண்டார்.

அநுபல்லவி.

செயிரகல்சிறுததொண்டர் பத்தியைசசோதிககத்
திருவுளத்தினிலெண்ணி பெரியகருணைநண்ணி. வயிரவ.

சரணங்கள்.

காளமேகத்தைப்போலக கருமயிர்புற மன்னக்
கனதும்பைமலரதிற் செருகிநட்சேத்ர மென்னத்
தூளிதபூதியுடன் திலதநுதலிற் றுன்னச
சுடர்மணிக்குண்டலந் தோடுஞ்செவியில மின்னத

தொந்தமுற்றகன வல்லிருண் மறையவே
கந்தரத்தில்பளிங் கொண்மணி நிறையவே. வயிரவ.

அடல்கரியுரிபோர்த்த மேனியில்அலங் காரம்
அமையக்கஞ்சுகமணிந் ததன்மீதிற்சன்ன வீரம்
கடலவருஞ்சங்குமணி வடஙகளுடனே யாரம்
காமபிரமாகவே அணிந்துவிளஙகத் தீரம

கைத்தலத்தினில்வ ளேச்சரி திகழ்ந்திட
முத்தலததினரு மெசசியே புகழ்நதிட. வயிரவ.

திரமாமவலக்கைதாங்குந் தமருகத்தின்பிர பாவ
ஜெயவொலிவாருதி யொலியும்அடககித தாவ
பிரமசிரஙகொளிடக் கரத்தால்மும்மல நீவப்
பிறங்குமுத்தலைசசூலந் திருத்தோளின்மீது மேவ

பிஞ்ஞகன்கருணை சிந்திப்பிரொன வர
கஞசமெய்ச்சரண மெனசிலமபொலி தர. வயிரவ.

அருள்பொழியுமுகத்தில் நகையுமபிர காசிக்க
அணுகியேதெரிசித்தோர் பாவமெலலாம் நசிக்கப்
பரவுமெய்யன்பெங்கும் விளங்கிபரி மளிக்கப்
பாக்கியவெண்காட்டு நங்கைபதியா மிகக

பத்தியுற்றசிறுத் தொண்டருங களித்திட
நித்யமுத்திநிலை பண்புடன் அளித்திட. வயிரவ.

## வயிரவ மூர்த்தங்கொண்ட பரமசிவம் திருச்செங்காட்டங்குடி யென்னுந் தலத்துக்கு எழுந்தருளுதல்.

விருத்தம்.

அருண்மன்னுமபரமனிந்தவண்ணமாக
அணிகொளவயிரவமூாததந்தன்னைத்தாஙகி
இருண்மலமறறூர்காணுங்கயிலைநின்றும
எழில்பெறறசெஙகாட்டஙகுடியைச்சாாந்துப
பொருண்மிகும்அவ்வூர்மட்டோமறறவெஙகும
புநிதசிவனடியார்களொருவரோனாக
தெருண்மனங்கொள்சிறுத்தொணடாக்ககப்படாமற
செயதிட்டார்அயன்தலைமுன்கொய்திட்டாரோ.

---

## வயிரவமூர்த்தி சிறுத்தொண்டநாயனாருடைய திருமாளிகை எங்கேயென்று தேடுதல்.

விருத்தம்.

அனுதினம்வந்தமுதுகொள்ளும்அடியாரெல்லாம்
அரன்செயலால்அன்றுவராதிருக்கத்தொண்டா
மனதுமெலிந்தன்பர்களைத்தேடிசசென்றூர்
வண்புவிமாதுளங்களிககப்பரமனுருங
கனபசிகொண்டவர்போலநடைதள்ளாடக்
கமலவடிசிவக்கநடந்தன்புமிகக
வினயசிறுத்தொண்டாமனையெதுவோவெனறு
மேவுவார்தெருத்தொறுமவினவுவாரோ.

தரு-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிறுத்தொண்டர்மனையெது-அதனைக்காட்டவேணும்
சிறந்தபுண்ணியவானகளே.

அநுபல்லவி.

பொறுததசடையிறகொன்றைப்பூநதார்பரிமளிக்கும்
பூதநாதனடியார் பொசிககஅமு          தளிக்கும்.சிறுத்.

சரணங்கள்.

வித்தகாதமமான்மதிததிடபபத்திசெ
யுத்தமராகுமஅம் மெயத்தொண்டாவாழ்மனை
யிததனைநோக்தே டித்திரிந்தேனெந்தன்
சித்தமகிழவ ருத்தநகொள்ளாமலே. சிறுத்.

சாரும்வயிறறிலதி கோரமாகவேயசி
நேரவும்அதனுல்வி சாரணைசெயதுவெகு
தூரமநடந்துமனஞு சோரவந்துறறேனிஙகு
பாரமார்த்திகமாகக் காருண்யமவைத்துநீங்கள. சிறுத்.

செபபும்நிாககட்லசூழும் இப்புவிதன்னிலேவி
ருப்பமுடனஅதுல தமபரதியானததுடன்
நற்பலன்தரும்யாகம் பறபலதர்ம்மஙகளும்
ஒப்புதலாகச்செய்யும் விப்ரகுலசிரேஷ்ட்ட. சிறுத்.

---

## வயிரவமூர்த்தி சிறுத்தொண்டநாயனூர்திருமாளிகைக்கு வந்து அவரைக்காணுமல் கணபதீச்சரத்தில் அத்திமரநீழலிற்போய் வீற்றிருத்தல்.

விருத்தம்.

இந்தவகைவயிரவரும்வினவவீதி
யினிலிருந்தோர்சிறுத்தொண்டாமனையைககாடட
வந்துநின்றுமனைக்குள்ளார்எவரொன்றேசெவ்
வாய்மலரசசந்தனமாதெதிர்வந்தேத்தி
முநதுமன்பாதமைததேடித்தொண்டர்சென்றூர்
மூர்ததியேமனைக்குளெழுந்தருளுமெனனச்
சந்தமிகும்ஒருபெண்ணைத்தலையிலென்றுந்
தாங்குவாாவரோமெனப்பின்வாங்குவாரோ.

திபதை-இராகம்-காம்போதி-ரூபகதாளம்.

கண்ணிகள.

மனையுளளேவரோம என்றவயிரவா
மரைடிதனைத் துதித்து - மிகு
விநயமாகவே சநதன நஙகையாா
விளம்புகின்றூரே மகிழ்ந்து.

என்னசாரணத் தால்வரக்கூடா
தென்கிறீா சொலலுதற் கரிய - மணி
பன்னகபூஷணா போல்வந்தவரோ
பகாவீரெமக்குத் தெரிய.

என்றுரைத்தலும் பெண்கள்தனியே
இருககுமனையில் யாருமா - புருடா
சென்றிருப்பது தன்மமல்லவென்று
செப்பினர் அப்பெரியோரும்.

கற்புக்கரசியாம வெண்காட்டுநங்கையார்
காதினிலிந்தச செய்தி - கேட்டு
அற்புதமாமன்பா போயவிடுவாரென்
றவருந்தலைககடை யெய்தி.

கனககசபைந டேசரன்பர்க்குக்
கனிந்தேஇடை விடாமல் - அமு
தினிதளிப்பவர் அன்பரைத்தேடவும்
இயாரும்அகப் படாமல்.

தியங்கிப்போயிருக் கின்றுருடனே
திரும்புவாரிதோ வருவார் - அதி
சயங்கொண்டும்மைக கண்டவுடன்குறை
தவிர்வார்அமுதுந் தருவார்.

எழுந்தருளியிங கிருககவேண்டும்
எமையாளவந்த தேவா - உயர்
செழுந்தவமுடை யோர்துதித்திடுங
திவ்யமகானு பாவா.

எனலுமதுகேட டோங்கும்வயிரவா
யாம்எபபொழுதும் வாசம் - செயும்
கனங்கொளிடமிவ் வுலகம்எளிதிற்
காணரும்வட தேசம்.

அன்பாராஞ்சிறுத் தொண்டரைக்காண
ஆசையால்வந்தோ மிப்போது - நீங்கள்
பொன்பொருளச சொரிந்தாலுமிங்கு
பொருந்தமனங் கொள்ளாது.

மன்னுங்கணபதிச் சர்த்துளாத்தி
மரத்தினடியிற் சென்று - அன்பர்
இன்னுமநம்மைத்தேடி வருமளவும்நாம்
இருப்போம்அங்கே யென்று.

தடுத்தாளவந்த வயிரவரந்தத்
தருவினிழலில் வந்து - தொண்டர்
இடுக்கர்தவிர்ததுப் பெருவாழவருள
இருநதாரஉள்ள முகந்து.

---

## வயிரவமூர்த்தி வந்தசேதியை சிறுத்தொண்ட நாயனருக்கு மனைவியார் விளம்புதல்.

விருத்தம்.

ஆத்தியடிவயிரவரும்அமரத்தொண்டர்
அடியாரைத்தேடிக்காணமல்மூனறு
நேத்திரங்கொள்பெருமானேநடபபதெல்லாம்
நின்செயலேயல்லாமல்வேறுண்டோவென்
றேத்தியேதமதுதிருமனைககண்வந்தா
இல்லாளும்பதம்வணங்கியிறைவரோசற்
பாத்திரராயொருவர்வந்தாரொன்றுசேதி
பன்னுவாரவாபெரியோராஎன்னுவாரே.

தரு-இராகம்—ஆனந்தபைரவி—ஆதிதாளம்.

பல்லவி.

கேளுமஎன்பிராணநாதரோ—சொல்கின்றேன்
கேளும்என்பிராணநாதரோ.

அநுபல்லவி.

ஆளுந்தெய்வம்போலோர பெரியவாவந்தெயதி
அகத்துள்ளார்யாரென்றூர் அதன்பின்நடந்தசெய்தி. கே.

சரணங்கள்.

கண்டுவணங்கி நின்ருேம — தொண்டாவருவார்
கணத்தில் இங்கிருமென்ருேம
தண்டைக்காற்பெண்களுள்ள இடத்தினில்நாமதன்னந்
தனியேவந்திருபபது சரியல்லவென்ருர் இன்னம்.கேளும்.

சூலககபாலக காரதரா - அண்டமதிரத்
தொனித்திடுந்தமரு கத்தா
சிலம்பரவும்அந்தப பெரியவர்வாழும் பூமி
தேசுலாவியவட தேசமெனருரோ சாமி.கேளும.

கணபதீசசரஞ் சென்ருா — ஆத்தியடியிற
கனிவாயிருபபோம என்ருா
குணமுடனேசென்று அஙகேஅவரைக கணடு
கூப்பிட்டாலஅமுதுண்ண வருவார்மகிழ்ந்து கொண்டு.கேளும்.

---

## வயிரவமூர்த்தி சிறுத்தொண்டநாயனூை வினவுதல்.

விருத்தம.

பத்தினியிவவிதமுரைககமனமுமுன்னே
பயிரவர்பாறசெல்லத்தாமதன்பின்சென்றே
உத்தமமார்ஆத்தியடிவீறறிருக்கும்
உமாபதியைசசிறுத்தொண்டர்கண்டபோதே
சித்தமுருகிடக்கரஙகளசிரமேற்கூம்பத
தேகபுளகிதமடையத்தாளினில்வீழ்ந
தத்தனேஅருளென்னசுவாமிஉள்ளம்
அலர்கின்ருாதாம்திருவாய்மலாகின்ருோ.

கரு - இராகம் - நாதநாமக்கிரியை - ரூபகதாளம.

பலலவி.

பெரியசிறுதடுதொண்டர்நீதானே — அதிக
பிரம்மைகொண்டுநிற்பதும்ஏனே.

அநுபலலவி.

திருவளருஞ்செஙகாடெனும்இநத
ஷேத்திரந்தனில் கீர்த்தி மிகுநத பெரிய.

சரணங்கள்.

படிமேறசிவ னடியார்க்கமு
திடுவேனெனக் கொடிநாட்டிய. பெரிய.

ஓதுதலமுதல நீதித்தொழிலால
மேதினிதொழும் வேதியர்குல. பெரிய.

தயைபொறுமையோ டியாபுகழுண்மை
வியனுலவிய நயகுணந்திகழ். பெரிய.

---

## வயிரவ மூர்த்தியாரை அமுதுகொள்ள வரும்படி சிறுத்தொண்டநாயனூர் வேண்டுதல்.

விருத்தம.

நீதானேசிறுத்தொண்டனென்றுகேட்ட
நிமலனைஅச்சிறுத்தொண்டாவணக்கஞ்செய்து
சீர்மிகுத்தசிவனடியார்தம்மைப்போற்றத்
தெரிந்திலேன்ஆயினுநல்லன்பாலப்
பேர்பெற்றேன்விண்ணப்பமொன்றுண்டுள்ளப்
பிரியமுடன்கேட்டருளவேண்டுமென்னப
பார்புகழவந்தமகதேவனருமா
பகருவீரெனத்தொண்டர்பகருவாரோ.

தரு—இராகம்—முகாரி—ருபகதாளம்.

பல்லவி.

அடியேன்விண்ணப்பமொன்றுண்டு—தேவரீர்அதனை
அருளிசசெய்யவேண்டும்மகிழ்கொண்டு.

அநுபல்லவி.

விடையேறுந்தற் பரனைப்போல்வந்த
விமலஜங்கம மூர்த்தியேஇந்த. அடியே.

சரணங்கள்.

வேதனையைத்தீர்க்கும்வெண் ணீறும்—என்றும
மெய்யினிற்பூண்டார்தினந் தோறும்
பேதமில்லாதுண்ண நலலமுதூட்டிப
பின்பெளியேனுண்ப தன்புபாராட்டி. அடியே.

கண்ணினாலுங்காண்பதற் கேனும்—அன்பர்
களைத்தேடித்தேடியின்றடி யேனும
எண்ணமிட்டுவந்தேன் வீட்டிலுள்ளாராகூற
இங்கடைந்தேனஉமமைக்கண்டேனீடேற. அடியே.

நான்செய்தபூர்வதவத் தாலே—இங்கு
நண்ணினீர் அந்தப்பயனை போலே
மேன்மையுறஎந்தன்மனையில்அன்புபூண்டு
மேவியமுதுசெய் வீரொன்னையாண்டு. அடியே.

## வயிரவமூர்த்திதம்து நியமனத்தின் தன்மைகூறுதல்.

விருத்தம்.

பரிந்தமுதுககழைத்தசிறுத்தொண்டர்தம்மைப
பயிரவருநோக்கிவடதேசந்தன்னில
இருந்தன்புமிக்கவும்மைக்காணவந்தோம்
எமக்கமுதுசெய்துவைககமுடியாதும்மால
அருந்தவனேயெனலுமஅடியாாகிடைத்தால்
அகப்படாப்பொருளும்உண்டோயாதுவேண்டும்
திருந்தவுரைத்தருள்வீரென்றன்பர்கேழ்க்கத்
தேற்றுவார்வயிரவருஞ்சாற்றுவாரே.

தரு—இராகம்-சாரங்கம்-ஆதிதாளம்.

பல்லவி.

நான்கொண்ட விரதத்தைக் கேள் சிறுத்தொண்டரே
நலமிகும் உத்தண்டரே.

அநுபல்லவி.

தேனொழுகவேபேசித் தெருவைக்கடக்கவிடுஞ
செய்கையாய் முடிக்காமல்
பொய்யென்றுநொடிக்காமல். நான்.

சரணங்கள்.

மகிமையாகவேநலல சாதம — நிதம
வாஞ்சித்துண்ணுமல்ஆறு மாதம் — சென்றால
புகலுமோர்பசுவினைச சேதம — செய்து
பொசித்தேஆனந்தங்கொண்டிருப்பதெந்தன்விநோதம். நான்.

இபபடியாயிந்த லோக - மிசை
இதையனுஷ்ட்டித்தேன் அனேக - நாளாய்
செபபும்நேற்றையதினம போக - இன்றைய
தினமேயோர்பசுவினை யுண்ணுநாள் பரிவாக. நான்.

அருமையாகவேயென்னைத் தேடி - வந்
தழைத்துமிகவும்நீர்வா தாடி - உள்ளம்
திருகாமலசெய்வேனென்று கோடி - தரம்
செம்பொற்ருளிலவணஙகு கின்றீர்மகிகூஷிநீடி. நான்.

---

## சிறுத்தொண்டநாயனூர் பசு அருமையல்லவென்றல்.

விருத்தம்.

இகபரசெல்வமன்பர்க்கீய்ந்திடும்பரமரிவ்வா
றகமகிழ்ந்தெனக்குநீரும்அமுதூட்டலருமையென்ருர்
பகவனேஉமககுவேண்டுமபசுவெதுதெரியசசொல்வீர்
தகவுறவென்றுசென்னிதாழ்த்துவார்வாழ்த்துவாரே.

தரு—இராகம்-புன்னுகவராளி—ஆதிதாளம்.

பல்லவி.

அரிதல்லஓர்பசு—அப்பசுஇன்னதென்
றருளிசசெய்குவீரையனே.

அநுபல்லவி.

சுருதிமுடிவில்நடஞ் செய்யும்பரன்போல்வந்த
சுவாமிகள்திருவுள்ளப் படிக்கிநடந்துகொள்ள. அரித.

சரணங்கள.

விதிமாலும்அறியொணு விமலவுமாப திகரும்
மெய்த்தொண்டுபுரிகின்ற விரதவடிய வாக்கும்
உதவுவதேஎனது விரதமாகும உமக்கும்
ஒருக்காலுமில்லையென்றுரைத்திடேனென்றனக்கும். அரிதல்.

இசைகொள்சுவர்க்கமுறை காமதேனுவைப் போலே
இனியபால்பசுவுடனீன்ற கன்றும்என் பாலே
பிசகிலாதுகூடடங் கூட்டமாய்மென் மேலே
பெருக்கமாகநாளு மிருக்குதாகை யாலே. அரிதல்.

தேவரீர்தம்முடைய வுதரவெம்பசி யேகச
சிறியன்சிறுகுடிலில் சென்றேயினிய பாக
மேவுமன்னமுங்கறி யமுதுமசமைத்து வேக
மிகும்பரிவுடனிங்கே வருவேனென்மெய் யாக. அரிதல்.

---

## வயிரவமூர்த்தியார் தாம்உண்ணும்பசுவானது நரப்சுவென்றல்.

விருத்தம்.

தொண்டருமிப்படியுரைக்கப்பித்தரொன்றுஞ்
சுவாமியார்அப்பெயரைநிறுத்துதற்கோ
கண்டகஞ்சேர்பேய்கள்சகவாசத்தாலோ
கண்ணைப்பரிட்டகறிக்கிதுமேலென்றோ
மண்டலத்திலிவரன்பைவிளக்குதற்கோ
வாய்கூசாதஞ்சாது அடியார்பத்தி
கொண்டவர்நீர்கேளுமென்னக்கேழ்க்கஇசைகை
கொள்ளுவார்வயிரவரும்விள்ளுவாரே.

தரு-இராகம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

நாமுண்ணும்பசு நரபசு — மற்றும்
நவில்வோம்கேட்பீரோ.

அநுபல்லவி.

க்ஷேமமாமென்விரதம்வடக்கி லுள்ள
தேசத்திற்கேட்டால் தெரியுமிதுகள்ளத்
தீமையென்றெண்ணுதீர் மெய்யடியார்கள்
திறத்தன்பினில் மிகு யோக
சிறுதொண்டரோ மகிழ்வாக. நாமுண்ணும்.

சரணங்கள்.

கோதில்லாதவேத சாஸ்திரமுணர்ந்து
குலவுமேற்குலத் தோங்கும் — உயா
குடிக்கொருபிள்ளை யாயிருக்கவேண்டுங்
கூடாதவையலத் தீங்கும்

பேதமில்லாத அருமருந்தன்னஅப்
பிள்ளையிளமையைத் தாங்கும் — அஞ்சு
பிராயமாகவு மிருக்கவேண்டும்
பின்னுஞ்சொல்வேன்செயும் பாங்கும்
காதலுற்றமனம் வேறுபடாதே
கனிவாயநிறை வயிறுரவே
இனியென்பசி யதுதீரவே. நாமுண்ணும்.

வெந்தபுண்ணிற்கோலை யிட்டதுபோலே
விளம்புமொழியொன் றுண்டு — அதன்
விபரமென்னெனில மேற்சொன்னபிள்ளையை
மிகுந்தமகிழ்ச்சி கொண்டு
சொந்ததாயாருமபிடிக்கப்பிதாவும்
சுடர்வாளாலிரு துண்டு — படச்
சுறுக்காயறுத்து அவையவம்யாவுந்
துண்டுதுண்டாகக கண்டு
சந்தமுடன்பல சம்பாரங்கூட்டி
சமையறசெய தால் திடடமா
அமையப்பொசிப்போம்இஷ்ட்டமா.நாமுண்ணும்.

இப்படிஉண்பது நம்விரதனுசரி
யிலலாதனுவா னாலும் - பிச
கிருந்தால்வந்தமு தருந்தோங் கியாபக
மிருக்கவேணுமென் மேலும்
ஒப்புக்கொள்ளத்துணிவீராமெய்யன்பினுக்
கோங்குமிருப்பிடம் போலும் - வந்த
உத்தமராஞ்சிறுத்தொண்டரோயோசியும்
உயர்புவனம்பதி னாலும்
தற்பரனாடிக் கற்பணமாமெனத்
தகைமேவிய தென்னப்படும்
மிகுதூய்மையாம் அன்னத்தொடும்.நாமுண்ணும்.

## சிறுத்தொண்டநாயனார் மனைவியாருடன் ஆலோசித்தல்.

என்றுரைத்தகணவர்தமைமனைவியாரும்
இறைஞ்சிவயிரவர்சொன்னபடியேயாக
நன்றிபெறுமமுதமைப்போங்குடிக்கோர்பிள்ளை
நமக்கெங்கேகிடைக்குமென்றுசொல்லக்கேட்டு
சென்றுநிதிமிகவளித்தாலோர்காலின்றோர்
செல்வனைத்தந்திடுவரவர்நேர்நேராக
நின்றுளங்கொண்டரியாதொன்றரன்றாளென்றும்
நேசிப்பார்மனைவியொடும்யோசிப்பாரோ.

தரு—இராகம்—நாதநாமக்கிரியை—ரூபகதாளம்.

பல்லவி

கறபினிலுயர்தேவியொடும்அக
கணவருமயோசித்தாரோ.

அநுபல்லவி.

| | |
|---|---|
| பற்பலவுயிர்கள | யாவும் — புகழ் |
| பதினிமாரொன்று | லாவும |
| அற்புதமாதர் | பராவும — நல்ல |
| அருந்ததியென | மேவும் — எங்கள். கற்பினி. |

சரணங்கள்.

| | |
|---|---|
| ஆதியடியி | லிருக்கும் - அந்த |
| அனபனைபபசியோ | நெருக்கும |
| காத்திருப்பாரென்ன | செய்யலாம் — இனனங |
| காலமபோக்கிலெவ்வா | றுய்யலாம் — என்று. கற்பினி. |

| | |
|---|---|
| நம்மிடதோட்டந | தனிலே — யிருக்க |
| நாடலாமாபுறத | தினிலே |
| செம்மையாகக்கறி | பாகம் - உடன் |
| செய்விப்பதலலோநா | வாகம் - என்று. கற்பினி. |

| | |
|---|---|
| நண்ணிநாம்பெற்றிடட | மைந்தன் — தன்னை |
| நாடியழைப்போமா | வுந்தன் |
| எண்ணமெப்படிசொல் | சங்கை — உண்டோ |
| ஏதேனும்வெண்காட்டு | நங்கை — என்று. கற்பினி. |

## சிறுத்தொண்டர் வயிரவர்சொன்னசேதியை மனைவியாரிடத்துரைத்தல்.

விருத்தம்.

பசுபதியிவ்விதமுரைக்கத்தொண்டருள்ளம்
பரிந்துபிள்ளைக்கறியுடனே அமுதளிப்பேன்
நிசமாகநம்பியிரும்வருவேன்சற்று
நேரத்திலென்றுதிருவடிவணங்கி
விசையொடன்பர்விடைகொண்டுமனையைநாடி
விரும்பிவரவெண்காட்டுநங்கையாரும்
அசனமுண்ணப்பெரியரோதோவென்னஐயம்
அகலுவார்நடந்தசெய்திபுகலுவாரே.

தரு-இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

வெண்காட்டுநஙகையேநான்சொல்வதையிப்போதே
விபரமாகக்கேட்பாய்தப்பாதே.

அநுபல்லவி.

விண்காட்டுமன்பருக்குத் தொண்டுசெய்வதேபெரு
விரதமென்றெண்ணுமெந்தன் தாமபத்தினியாந்திரு. வெ.

சரணங்கள்.

கணப தீச்சரஞ்சென்றுகலக்கமெல்லாம் விண்டேன்
கருதும்ஆத்திநிழலிற் பெரியோரிருக்கக கண்டேன்
அணுகிப்பணிந்தேஅய்யர் அருளினனமுதையுண்டேன்
அளவில்லாதபர மானந்தாவேசங கொண்டேன். வெண்.

ஆவலாயவர்பாதம் போற்றியேநமஸ் கார
மாகத்தொழு தமுதுக் கழைத்தேன்மகாகெம் பீர
தேவர்உன்னலாகுமோ வென்றாரைய நீரத்
தெரிவிததாலவ்விதஞசெய் வேனென்றேன்கற்பாதார. வெண்.

பிரமகுலத்திலொரு குடிககோர்புத்ரனா யுள்ள
பிள்ளையைமகிழ்வுடன் தாயார்பிடித்துக் கொள்ள
அருமைத்தந்தையரியச்சமைத்திட்டாலுண்பேன்கள்ள
ஆசாரமல்லவென்றார் செயவேணுமிதை மெள்ள. வெண்.

## சிறுத்தொண்டநாயனார் சீராளதேவனைப் பள்ளிக் கூடத்திலிருந்து வரும்படி அழைத்தல்.

விருத்தம்.

குணவதியாம்நங்கைசிறுத்தொண்டர்சொன்ன
 குறிப்பறிந்துபத்தாவைமகிழ்ச்சியாலே
அணிகொள்முகமலர்ந்தவரர்க்காணவெண்ணி
 அன்பினெலாத்துக்கொண்டெழிலசோநகண்
மணியானபுத்ரசிகாமணியைநீர்போய்
 வண்மையுடனழைத்தெடுத்ததுவாருமென்னக்
கணமதிற்பள்ளியிற்சென்றுகண்டேஎம்மைக்
 காவென்பார்சீராளாவாவென்பாரோ.

தரு — இராகம் — மோகனம் — ரூபகதாளம்.

பல்லவி.

வாவாசீராளதேவனே — மனமகிழ்வுடனிப்போ
வாவாசீராளதேவனே.

அநுபல்லவி.

பூவார்பதத்தினிற் சிலம் பொலித்திடப
பூரணமாகநம் மெண்ணம் பலித்திட. வாவா.

சரணங்கள்.

சிலமுறும்வட தேசந்தனி விருந்தா — ஒருவர்
தேடியேநமது மனைதனில வந்தா
ஆலஸ்யஞ்செய்யாம லன்பு சதிக்கவே
ஆனந்தமாகநீ யேத்தித் துதிக்கவே. வாவா.

இன்னேரம்நீவருகின்ற வழி மேலே - கண்கள்வைத்து
இருந்துமநீவாரா திருந்ததி னாலே
உன்னையழைத்திட வந்தேனஅப்பா நல்ல
யோகம்நமக்குக் கிடைக்குதுபொய் யல்ல. வாவா.

ஆதரவுறும் சாஸ்த்திரம் யாவும் — சிறுவர்க்
கடைவுடனோதி வைத்திசையின் மேவும்
நீதிகொள்வாத்தியார் பாதம்போற்றிக் கொண்டு
நீவிடைபெற்றுவந் தால்நன்மைக ளுண்டு. வாவா.

## சீராளதேவனை அலங்கரித்தல்.

விருத்தம்.

இவ்விதந்தந்தையுமழைக்கவாத்தியார்தம்
இணையடியையவணங்கிவந்தமைந்தன்றன்னைச்
செவ்வைபெறத்தோண்மேற்கொண்டில்லஞ்சாரத்
தேவியாரெதிர்வந்துவாங்கிக்கொண்டு
திவ்யபணியெலாந்திருத்திமுகந்துடைத்துத்
திருமஞ்சனமுமாட்டிக்கோலஞ்செய்து
ஒவ்விமனமகிழ்ச்சியுடன்றரவேஅன்பர்
ஓங்கினார்கரங்களினால்தாங்கினாரே.

## மகவரிதல்.

விருத்தம்.

மகிழ்வுடனப்புத்திரனைத்தொண்டர்வாங்கி
மகிதலத்தோரறியாமல்மறைவிற்செல்லத்
தகைகொள்திருவெண்காட்டுநங்கையாருஞ்
சாக்கிரதையொடுபாத்ரங்கழுவிச்சென்றே
புகலுமிதிலிடையூறுநேரிடாமற்
புநிதபரசிவமே காத்தருளென்றன்பாஞ்
சுகமலரையிருவர்களும்பரன்றாண்மீதிற்
சொரிகுவார்அரியவினைபுரிகுவாரே.

தரு-இராகம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

அருந்தவர்புகழ்ந்தேத்தும் வயிரவர்க்கமுதூட்ட
அரிந்தார்சீராளதேவனை.

அநுபல்லவி.

பொருந்துமடைப்பள்ளியிற் சென்றால்தெரியு மென்று
புவனத்தோரறியாமல் மறைவானஇடஞ் சென்று. அருந்.

சரணங்கள்.

உண்மையைநிலைநாட்டல் தர்மமென்றுபிரக்கி யாதி
யோங்குந்தொண்டருஞ்சிரம் பிடிக்கத்தாயாரும்ஜோதி
நண்ணுநகிண்கிணித்தாளுங் கரமும்பிடித்தே ஆதி
நாதாஓம்நமசி வாயவெனவே ஓதி. அருந்

தன்னைவருந்திப்பெற்ற தாயுந்தந்தையு மிக்க
சந்தோஷம்அடைகின்றா ரெனச்சுதனுங் களிக்க
மன்னும்பத்திமைஞான மணங்கள்பரி மளிக்க
வளரும்பரமானந்த மாக்கடலிற் குளிக்க. அருந்.

தோன்றுமுலகமகா யிந்திரசாலக் கட்டு
தொலைய நித்யவஸ்த்துவைப் பெறஆசாபாசம் விட்டு
வான்றொழு இருவர்கள் மனதும்ஒருமைப் பட்டு
வாய்ந்திடுஞ்சிறுத்தொண்டர் ஆயுதங்கையிற றொட்டு. அருந்.

---

## பிள்ளைக்கறிசமையல்செய்தல்.

விருத்தம்.

வினையொழிக்கத்தொண்டரிந்தவாறுசெயது
மேவுதலை கறியமுதுககாகாதென்றே
கனமிகுசந்தனமாதையழைத்தாரார்கள்
காணுமலிதைமறையென்றீயக்கொண்டார்
தனயனெழில்தங்குமற்றவுறுப்பைக்கொத்தித்
தசைஎலும்புகுடல்மூளையிரல்வெவ்வே
றனமுடனுண்பதற்கிசையச்சம்பாரஞ்சேர்த்
தமைத்திட்டார்கறிவகைகள்சமைத்திட்டாரே.

தரு - இராகம் - மத்தியமாவதி - ரூபகதாளம்.

பல்லவி.

சமையல்செய்தாரே - பிள்ளைக்கறி
சமையல்செய்தாரே.

அநுபல்லவி.

இமையோர்துதி வயிரவர் சொல்ல
இஷ்ட்டமுடன்துணிந் திட்டேயவர் நல்ல. சமையல்.

சரணங்கள்.

மகிழ்வாய்மைந்தனை அறுத்தே – தலை
மறைத்துமற்றதைச சிதைத்தே
பகருமாமிசமிகவுங் கதித்தே
பாரவெலும்புகளானதைப் பிரித்தே. சமையல்.

ஈரல்மூளையின் கறியும் — ருசி
இசைமணிக்குடல் கறியும்
நேருமிளந்தசையாகிய கறியும்
நேத்தியதாகவேகூட்டின கறியும். சமையல்.

குறித்தசம்பாரஞ் செறிய — இட்டுக்
கோதில்பசுநெய்யும் உறைய
வறுத்துப்பரிமளமெங்கு மெறிய
மாதேவனருஞ்சுவைகள் அறிய. சமையல்.

சுகமரக்கறி யனேக - விதங்
துவையல்பொரிய லாகத்
தகுபருப்பும்பாயசமுஞ் சோக
தாபந்தணிக்க சாதம்பாக மாகச். சமையல்.

---

## வயிரவமூர்த்தியைத்திருவமுதுகொள்ளும்படி அழைத்தல்.

### விருத்தம்.

சமையல்செய்தாயிற்றென்றுதம்மொடுமனையாள்கூற
நிமிஷநேரத்திற்சென்றுநேயமாதவனைப்போற்றி
அமையெனச்சொன்னவண்ணம்அமைத்திட்டேன்மனையில்வந்
விமலரோஅமுதுகொள்ளுவீரென்பார்சீரொன்பாரோ. [அ

தரு - இராகம் - தோடி — ரூபகதாளம்.

### பல்லவி.

அமுதுகொள்ளவருவீரையரோ — ஏழைமீதில்
அனுக்கிரகம்புரிந் தருள்செய்மெய்யரோ.

### அநுபல்லவி.

உமதுதிருவுள்ளப்பிர காரம்
உண்ணலாம்ஆகுதே நேரம். அமுது.

### சரணங்கள்.

சாமிகள்சொல்லியவிதம் போலே - சென்று
சமைத்திங்கேவரஅடியேன்றன் றுலே
தாமசமானதுக்ஷமை தந்தருளி
தமியேன்மடத்தி லினி வந்தருளி. அமுது.

பசியடக்கியோராறு மாதம் - மிகப்
பாங்காயிருந்ததே விநோதம்
இசைகொள்தேவர்விரதம் நிறைவேற
இன்பமுடனீங்கள்வந்த களையாற. அமுது.

சாரும்புதையல்தனத்தைநே ராகக் - கண்ட
தாரித்திரன்போலேமகா யோக
நேருந்தேவரீரைக்கண்டேன் கீர்த்தி
நிறையுங்கருணைவயிரவ மூர்த்தி. அமுது.

---

## திருவமுதுபரிமாறும்விதந்தெரிவித்தல்.

விருத்தம்.

வயிரவரைத்தொண்டரிந்தவாறழைக்க
வந்தருள மடந்தன்னில்நங்கையாருஞ்
செயிரறவேதொழுதுமணிப்பீடமீய்ந்து
திகழ்காரகநீரேந்தவிமலாபொற்றாள்
நயமுடனன்பரும்விளக்கித்தாங்களந்நீர்
நற்சிரசிற்றெளித்துபச ரித்துப்பூசை
வியனுறச்செய்தமுதிடலெவ்வாறுசொல்லு
வீரென்பாரவருங்கேட்பீரென்பாரே.

தரு–இராகம்-சங்கராபரணம்–ஆதிதாளம்.

பல்லவி.

திருவமுதிடும்விதந் தெரியாதாஆகிலும்
செப்புவோம்கேட்பீரே.

அநுபல்லவி.

உருகுமனதுகொண்ட உயர்சிறுத்தொண்டனோ
ஓதருந்தியாம்வெண் காட்டுநங்கையாரே. திருவமு.

சரணங்கள்.

பரிவாய்முன்னமமுதிட் டிருந்தால்கேட்பீரா நின்று
பசப்புகிறீர்கள்தான பரரைப்போல்மிக நன்று
தரந்தரமொட்டைச்சியைக் கூந்தலழகி யென்று
சாற்றல்போல்பேர்கொண்டீர் தகுந்தசிறப்பாயின்று. திருவமு.

உரைத்தபடிக்கறிகள் அமைத்திரோ அதைத்தொட்டு
உண்ணும்போதல்லவோ வெளியாகுமுங்கள் குட்டு
பரிக்கும்எனதுவிரதம் தெய்வசெயலால் முட்டுப்
படிடாமல்முடிய வேண்டும்பிரியப் பட்டு. திருவமு.

மகிதலந்தனிலிது வரையிலும் உண்டபடி
வரிக்கும்பரிகலங்கள் திருத்திநாம் விண்டபடி
அகமகிழவேயொரோ தரமாகக் கண்டபடி
அன்னங்கறிபடைப்பீர் நாம்விரதங் கொண்டபடி. திருவமு.

## வயிரவமூர்த்தியாருக்குத் திருவமுதுபரிமாறுதல்.

விருத்தம்.

ஐயனிந்தவிதஞ்சொல்லத்தொண்டனாரும்
ஆறணிந்தகடவுள்தமைநோக்கி யாங்கள்
உய்யவந்ததேவாநின்விரதத்தின்றன்
ஒழுங்கறிந்தவ்விதஞ்செய்யக்கேட்டோங்கோபஞ்
செய்யவேண்டாம்பொறுப்பீரென்றுரைத்துத்
தேவியைநல்லமுதுபரிமாறுமென்ன
மெய்யுறும்வெண்காடுநங்கையாருமன்பில்
வீறுவாரமுதுபரிமாறுவாரே.

தரு—இராகம்—கலியாணி—திரிபுடை—தாளம்.

பல்லவி.

திருவமுதுபரிமாறுவாரே—வெண்காட்டுநங்கையார்
திருவமுதுபரிமாறுவாரே.

அநுபல்லவி.

மருவும்வயிரவ வடிவத்தொடும் வந்த
மாதேவருள்ள மகிழ்வுறச் சிறந்த. திருவமு.

சரணங்கள்.

ஊகைமேவியநாயனார்கு லாவ - எதிர்நின்றன்பாய்
உபசாரஞ்செய்தமுதிடென் றேவ
வாருடன்பரிகலமுஞ் சீர்பெற
வைத்துமுத்தினைப்போல வெண்ணிற
மாகும்அன்னமும்படைத்துக் குறைவற
ஆக்கும்பற்பலகறியு மின்புறத். திருவமு.

மனதுமகிழ்சீராளனுஞ் சுதனை - பரிவாய்ச்சமைத்த
மணங்குலாவியகறிகளாம் அதனை
இனமாத்திருப்பாவாடை விரித்து
இட்டசோற்றின்பக்கத்தில் வரித்துப்
புனிதமாம்பருப்பதனமேற் பரித்துப்
புத்துருக்குநெய்யும்விட்டுப சரிதத்துத். திருவமு.

ஆயாசந்தீர்க்கும்பாயசம் வாச - மிகுவடையுமபோளியும்
அதிரசமுமுப்பழமும்மணம் வீசத்
தூயகையிலொட்டிக்கொள்ளுமபடி யாகத்
தோய்ந்தகட்டித்தயிரும்பசி போக
நேயமாகஎதிர்வைத்துண்பீா யோக
நித்தியாநந்தரோயென்றன் பாகத். திருவமு.

---

## தலையைக் கறிசமைக்காதிருந்த விதம் சொல்லுமென வயிரவர் வினவுதல்.

விருத்தம்.

இந்தவண்ணமமுதுபரிமாறஅய்யன்
இனியபிள்ளைககறிமுழுதுஞசமைத்திட்டோா
அந்தவிதமியம்புமென்னநங்கையாரும்
அமுதுக்குத்தலையாகாதெனக்கழித்தே
முந்தமற்றதைசசமைத்தோமென்றுரைக்க
மூர்த்தியார்சிறுத்தொண்டர்தம்மைநோக்கி
எந்தவிதந்தலைக்கறியைநீக்கலாகும்
என்னுவார்அவாகளுடன்பன்னுவாரோ.

தரு—இராகம்—அடாணு-ஆதிதாளம்.

பலலவி.

என்னவிதத்தால் நீங்கள தலையைக்கறிசமைக்கா
திருந்தீர்கள் சிறுத்தொண்டரோ.

அநுபல்லவி.

மன்னுமுங்கள்சொல்லை நம்பிஅபல மாச்சு
வளந்தருமத்தியானப்பொழுதுந்திரும்பிப் போச்சு. என்ன.

சரணங்கள்.

தேனைக்குடித்துவண்டு கானமபுரியுமலர்த்
தானமமருஞ்சது ரானனன்படைப்பிலுண்
டானஎண்சாணுடம்பிற் கூனமில்சிரமேபிர
தானம்பெற்றதேஎன்று நானிலமென்றும்விளம்பும். என்ன.

அஞ்சாமல்முன்னம்வாய் மிஞ்சிச்சொல்லியதற்குக்
கொஞ்சமேறக்குறைய ரஞ்சிதஞ்செய்வமென்ன
வஞ்சகமாயுங்கள் நெஞ்சந்தன்னிலேயிவன்
பஞ்சையாண்டியென்று கிஞ்சித்தாயெண்ணினீரோ.என்ன.

பேசுந்தாசர்களைப்போல் பூஜிதஞ்செய்தீர்புத்தி
மோசம்போனேன்விரதம நாசமாக்காமல்நீஙகள்
ஆசைப்பிள்ளைக்கறியை லேசமுங்குறைவின்றி
நேசத்துடனேயிட்டால் போசனஞ்செய்வேனிப்போ. என்.

---

## சிறுத்தொண்டநாயனுரையும்வெண்காட்டுநங்கை யாரையும் சந்தனநங்கையார் தேற்றுதல்.

விருத்தம்.

எங்குநிறைபூரணநித்தன்மையாக
இயம்பக்கேட்டன்பருந்தம்மனைவியாரும்
அங்கைநெரிததிப்படிஅக்கறிகேட்பாரொன்
றறியோமென்றயர்ந்திடவாடும்பயிர்ககு
மங்குல்மழையுதவிசெயுந்தன்மைபோல
வளர்சந்தனத்தாதியாரும்அன்னோர்
செங்கமலத்தாள்வணஙகியவர்நெஞ்சத்தைத்
தேற்றுவார்மிகமகிழச்சாற்றுவாரே.

தரு - இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

சஞ்சலப்படவேண்டாம்-நீங்களொன்றுக்கும்
சஞ்சலப்படவேண்டாம்.

அநுபல்லவி.

விஞ்சும்புகழ்கொள்சிறுத் தொண்டராந்தாதாவே
வெண்காட்டுநங்கையா ரொன்னுமென் மாதாவே. சஞ்ச.

சரணங்கள்.

வண்மைகொள்சாதுசங்க வழிநின்றானே ஓங்கு
முண்மையாகநம்பு வோர்க்கென்றுமில்லை தீங்கு. சஞ்ச.

வகைமோசம்போனுமென்று மயங்காதீர்நல மாகக்கும்
தகைமையாகச்செய்த தருமமேதலை காக்கும். சஞ்ச.

தாங்கவேவந்தஇந்த சாமிகேட்பாரென நான்
பாங்காய்த்தலைக்கறியும் பாகமாய்ச்செய்து வைத்தேன். சஞ்ச.

---

## தலைக்கறிபடைத்தபின் சிறுத்தொண்டநாயனார் சிவனடியார்களைத்தேடுதல்.

விருத்தம.

சந்தனத்தாயிவையுரைத்துசசமைத்தஅந்தத்
தலைக்கறியினமுதுமெடுத்தளிக்கவாங்கி
விந்தைமிகுவயிரவர்கருநங்கையாரும்
விருப்பமுறப்படைத்திடலும்நாயனை
எந்தைவயிரவர்நோக்கியென்னேடுண்ண
ஈசனடியவரைப்பார்த்தழைப்பீரென்ன
வந்தவருண்பதற்கிடையூறிதுவோவென்று
வாடுவார்அடியவரைத்தேடுவாரே.

தரு-இராகம-காம்போதி – அடதாளம்.

பல்லவி.

அடியவர்தமைத்தேடி ஞரே – வானத்
தண்டரும்புகழ்தொண்ட ஞரே.

அநுபல்லவி.

திடமாரிருளையெல்லாம் நொடியில்மாற்று மிந்து
சேகரர்சொன்னவண்ண மாகத்தெருவில் வந்து. அடி.

சரணங்கள்.

சஞ்சிதாகாமியம் பிராரத்துவமாங் கெட்ட
சமஸ்த்தவினைகளெல்லாம் சுடுமழலினிற் பட்ட
பஞ்சதுபோலாக முத்திநிலைமை யெட்டப்
பரிவாய்வெண்ணீறு சிவாயநமவென் றிட்ட. அடி.

வீணாவாரப்ர பஞ்சமாயையைப பூட்டும்
விகிர்தமுககுற்றங்களுமடங்கமிகவும் வாட்டும்
மாணுறும்பார்வையால அருள்செய்துகதி காட்டும்
மாதேவர்சரணார விந்தமனதில் நாட்டும். அடி.

ஆறுமதியுமணிந்தருந்தவர் தொழ மன்று
ளாடியபரமனூக் கன்பனைக்காணே மென்று
தேறுந்தமதுமன வருத்தங்கொள்ளாமல் அன்று
தெருக்கள்தோறும்ஓடி ஓடியெங்குஞ் சென்று. அடி.

## சிறுத்தொண்டநாயனூர் முன்னுண்ண வயிரவர் கடிந்துரைத்தல்.

விருத்தம்.

அனையதொண்டர்தேடியன்பரைக்காணுமல்
ஐயன்முன்வந்தொருவரையுங்காணேன்வெண்ணீ
றினிமையுடனிட்டோரைக்கண்டேயானு
மிடுவெனெனநீறிட்டோர்நின்போல்யாவர்
தனதுடனீருண்ணுமென்னநகைவிட்ட
சாதத்தைத்தொண்டருண்ணத்தொடங்கும்போதிற்
கன்மொடியானுண்ணுமுன்னமநீயுணத்த
காதென்பார்ஞாயமிதற் கியாதென்பாரோ.

தரு–இராகம்–கலியாணி–ஆதிதாளம்.

பல்லவி.

விருந்தாளியுண்டல்லோ தாமுண்பதென்றுஞாயம்
மேதினியிற்சொல்வர்வாலாயம்.

அநுபல்லவி.

பொருந்துந்தானதர்மம் புரிந்துவருநல்லோரோ
போதந்தருமாகம வேதம்ஓத வல்லோரோ. விருந்தா.

சரணங்கள்.

இமையவர்போற்றும்ஆத்தி நீழலில்வீற்றி ருந்த
எம்மைவரவழைத்தீர் உபசாரங்களுமுந்த
அமையஏறவிட்டேணி வாங்கினூற்போ லிந்த
அனியாயமுஞ்செய்ய லாமாபசித்து வந்த. விருந்தா.

அழுங்கள்ளன்தொழுங்கள்ளன் ஆசாரக்கள்ளன்மேலும்
அன்பரைக்கண்டபோது கும்பிடுங்கள்ளன் போலும்
ஒழுஙகுறக்காட்டினீர தெரிந்தால்நானொருக் காலும்
உண்பதற்கிசைந்திடேன்மெய்ஞ்ஞானியா    ஞலும். விருந்தா.

ஆறுமாதத்திற்கோர்கால் அமுதுண்ணும்நானேயின்ன
மவசரப்படவில்லை யதற்குமுன்னமே    தின்ன
ஈறில்லாப்புகழாளா பரிகலத்திட்ட    அன்ன
மினியதேவாமிர்தமா யிருந்ததாஞலும்    என்ன விருந்தா.

---

## வயிரவமூர்த்தி பிறகு தன்னோடு அமுதுண்ண உமதுபிள்ளையை அழையுமெனல்.

விருத்தம்.

இறைவனிதுசொலத்தொண்டர்தேவரீருண்
டிடுதற்குயான்முனுண் டிடத்துணிந்தேன்
குறைவுசெயயவில்லையென்றுவணஙகஐயன்
கோதிலமுதென்னெடுண்ணநீஙகள்பெற்ற
சிறுவனேயிங்கழையுமென்றுரிநதவேளை
சேயனுதவானென்னஅவன்வந்தாற்றன்
வெறுமையில்லாதுண்பேனுனென்றுமேரு
வில்லினர்கண்டிதமாய்ச்சொல்லினரே.

---

## சிறுத்தொண்டநாயனாரும்வெண்காட்டுநங்கையாரும் வீதியிற்சென்றுபிள்ளையை அழைத்தல்.

விருத்தம்.

சொன்னமொழிகேட்டசிறுத்தொண்டனருந்
தோகையாருந்தஙகண்மதிமயங்கி
என்னசெய்வதிதற்கென்றேஒன்றுந்தோன்று
திருக்கவயிரவமூர்த்தியவரைநோக்கிப்
பின்னமாநினேயாதீர்தெருவிற்சென்று
பிள்ளையழைத்திடவருவாயென்றுர்மைந்தன்
தன்னேநினேந்திருவரும்போய்உள்ளத்தன்பு
தழைக்கின்றர்புத்திரனேஅழைக்கின்றரே.

தரு-இராகம்-ஆரபி-ரூபகதாளம்.

பல்லவி.

அப்பாமகனேநீ வாவா — எங்கள்
அருமைசசீராளனே வாவா.

அநுபல்லவி.

ஒப்பில்லாதவித்தை கற்கு நிதான
உததமஅறபுத மெய்ததவ மான. அப்பா.

சரணங்கள்.

வாய்ந்திடுமுன்னைத் தேடித் தேடி
மயங்காதிந்த க்ஷணமிங கோடி. அப்பா.

மாரிகாணுப்பயிர் போலேவா டாது
வயிரவரோடுண்ண மகிழ்வாயிப போது. அப்பா.

அரியமுத்தியா னந்தங்கை கூட
அன்பருன்னையழைக கின்றார்கொண் டாட. அப்பா.

---

## சீராளர் அவ்வாறே வருதல்.

விருத்தம.

கவலையுடன்தாயுந்தந்தையுமுன் ஐயர்
கட்டளையின்படித்தெருவில்வந்தழைக்கச்
சிவனருளால்கீழ்த்திசையிலுதயஞ்செய்யுந்
திவ்யதினகரன்போலுமொளிவிளங்கக்
குவலயத்தோர்மகிழ்ச்சிகொள்ளப்படிக்கும்பள்ளிக்
கூடமிருந்தோடிவருந்தன்மைபோலத்
தவமுயன்றசீராளதேவரின்பந்
தந்திட்டார்கண்ணெதிரேவந்திட்டாரே.

தரு—இராகம்-கலியாணி—ஆதிதாளம்.

பல்லவி.

வந்தார்சீராளதேவனார்—யாவர்க்குமின்பந
தந்தார்சீராளதேவனார்.

அநுபல்லவி.

சிந்தாகுலங்களெல்லாந் தந்தைதாயார்க்கு நீங்கத்
தேஜோமயபரம சிவன்திருவரு ளோங்க. வந்தா.

சரணங்கள்.

வயிரக்கடுக்கன்காதில் வதிந்துபிரகாச மன்ன
உயர்நவமணிச்சுட்டி ஓங்குநுதலில் மின்ன. வந்தா.

அரையில்கிண்கிணிமாலை அழகுபட்டாடை மேவத்
தரமிகுமணிமார்பில் சரபபளியுங் குலாவ. வந்தா.

தாயுந்தந்தையுமுள்ளந் தனிற்கொண்டதுசித்திகைத்
தூயதண்டைச்சதங்கை துணைத்தாள்களில சத்திக்க. வந்தா.

மங்கைபாக ரருளை வாழ்ததியுள்ளத்தி லூன்றிச
செங்கைப்புத்தகத்துடன் சீக்கிரமாகத தோன்றி. வந்தா.

---

## பிள்ளையுடன்வந்த சிறுத்தொண்டநாயனுரும் மனைவியாரும் வயிரவமூர்த்தியைக்காணுமல் வருந்திமயங்குதல்.

விருததம்.

வந்த திருமைந்தர்சீராளனை
மகிழ்ந்தெடுத்துக்கரத்தணைத்துத்தழுவிக்கொண்டு
முந்தியவெண்காட்டுநங்கையார்கொடுக்க
முதன்மைபெறுஞ்சிறுத்தொண்டர்கையில்வாங்கி
விந்தைகொளத்தாங்கியுச்சிமோந்தடங்கா
விருப்புடனேஅவயவங்களெல்லாம்நோக்கிக்
கொந்தலருங்குழன்மனைவியொடும்பேரின்பங
குளித்திட்டார்அருளையுன்னிக்களித்திட்டாரே.

திபதை-இராகம-தோடி-ஆதிதாளம.

கண்ணிகள்.

சிந்தைகளித்தினிமேல் வந்தவயிரவருந்
திருவமுதுண்ணசசந் தேக - மென்ப
தெந்தவிதமுமில்லை யென்றுசீராளரொடு
மெழின்மடத்தினில்வேக மாக.

வந்தன்பர்பார்க்கவும் வயிரவரைக்காணாமல்
மனதுநடுங்கியே வெருண்டு - மேலு
முந்திப்படைத்திருந்த இறைசசிக்கறியமுது
முழுதுஙகாணாமலே மருண்டு.

அடியேங்களுய்யும் பொருட்டுத்திருவமு
. தருந்தாமலெங்கையோ ஒளித்தார் - என்று
படியினில்வீழ்ந்தெழுந் தெங்குந்தேடித்தேடிப
பார்த்துமிகவுந்தக் தளித்தா.

இதுவென்னமாயமோ இதுவென்னஞாயமோ
இதுசெய்துமறைநதிடத் தானோ - எஙகள்
பதியேயுமதுதிரு வாக்குக்கெதிர்சொல்லாமல்
படசத்துடன்செய்ததும் ஏனோ.

எங்களாலேதேனுஙகுறையுண்டோதெரியாது
எமபெருமானேசொல் வாயே - அருள்
பொங்கும்உம்முடைய பெருமைககழகிதாமோ
பொறுத்தெமமைரட்சிப்பாய் நீயே.

என்றுதாமரையிலை நீர்போலதததளிகக
இப்பரதவிப்பைக்கண்டு நேரே - முன்னே
சென்றுமறைந்ததிருச் சிற்றம்பலநடேசா
திருவுளத்திரக்கம் வைத தாரே.

---

## பரமசிவன் சிறுத்தொண்டநாயனார் முதலானவர் களுக்குத் தெரிசனந்தருதல்.

விருததம.

பகர்கருணாநிதியென்னுஞ்சிவனார்தொண்டர்
பக்தியையும்வெண்காட்டுநஙகையார்தம
திகழ்கற்புநிலைமையையும்விசிதமாகத்
திருவுளத்திறகொண்டருளியுயாபேரினப
சுகமதனிலிருத்தஅதிவிரைவாய்வேதந்
துதிககவெள்ளைவிடையிலெழுந்தருளியோங்குங
ககனமிசையெதிர்தோன்றியவர்களகாணுங
கனந்தந்தாவிபவதரிசனநதநதாரே.

தரு-இராகம்-கலியாணி-சாப்புதாளம்.

பல்லவி.

தெரிசனந்தந்தாரோ - கைலாசநாதர்
தெரிசனந்தந்தாரோ.

அநுபல்லவி.

விரியஷ்டட்டதிசையோர்கள் துதிநித்திய கல்யாணி
விமலையுமையொருபா லுறவேலா யுதபாணி
பரிவுற்றிடுமம்மையப் பருககுநடுமத்தியில்
பாங்கிஞெடுவிளங் கிடவும் பரிந்து
நீங்கரியதிவ்ய கருணை புரிந்து. தெரிச.

சரணங்கள்.

கண்மலரருசசிததுச சக்கரம்பெற்று மேவுங்
கரதலமுகில்வண்ண நெடுமாலாகிய கோவுந்
தண்மைசேர்செங்கம லாசனமுற்ற தேவுந்
தருநீழலிலரசு புரிந்துபுகழ் குலாவுந்
தாமஇந்திரன் அமரா போற்றத்
தேன்மலிந்திடு மலர்கள் தூறறத. தெரிச.

துங்கசிவகணங்கள் சூழ்ந்துநின்று துதிக்கச்
சுத்தவிஞ்சையர்பாடி உள்ளத்தன்பு பதிக்கத்
தங்குதுந்துபிவாத்ய முழங்கிஎங்கும் கதிக்கச்
சர்வஜீவர்களுக்கும் பிர்மமானந்த முதிக்கத்
தாக்குமலங்கெடுத் தருள்மெய்ப் போத
வாக்குமனங்களுக் கென்றும் அதீத. தெரிச.

அன்பில்மிகுந்தஎங்கள் சிறுத்தொண்டநாயனும்
அருமைசசீராளநுந் தருமபத்தினி யாரும்
இன்பத்திருவுருவைக்கண்டு செல்வமுஞ் சீரும்
இன்றல்லோபெற்றேமென்றுசந்தனநங்கையாரும்
ஏத்திச்சிரமிசைக் கரங்கள் குவிய
வாழ்த்திநிலத்தினில வணங்கத் திவ்ய. தெரிச.

## நாயனார்முதலியோர் சிவபெருமானைத் துதிசெய்தல்.

### விருத்தம்.

எனையாளுஞ்சிவபெருமான்தந்தசேவை
யேத்திவணங்கியஅன்னோநால்வர்தம்மை
அனைபோலும்நோக்கியுங்களன்பைமெச்சி
யாளவந்தோமிவ்வுலகந்தன்னில்நின்றும்
வினைதீர்க்குங்கயிலையில்வந்தெம்மையென்றும்
விடாதுவணங்கிப்பேரின்பத்தையுண்டு
களிவொடிருந்திடுங்களென்றேஅருளஅன்பர்
கதித்திட்டார்பணிந்திறைஞ்சித்துதித்திட்டாரே.

தரு-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

சமபோசங்கரா - ஓம்ஹரா
சர்வமங்கள கங்காதரா.

அநுபல்லவி.

அம்போருகன்மாலும் அந்நாள்தேடியுங்காண
அரிதாகியபர நாத மகாதவ
விரதாதியர்பணி பாத சதாசிவ. சம்போ.

சரணங்கள்.

எடுத்தசனனசன னங்கடோறுந்துதித்
தென்னதவஞ்செய்தேமோ சிறியோம் - தின
மிசைந்தபுண்ணியமெல்லா மொன்றாகவேசேர்ந்
திந்தப்பலனுண்டாச்சோ அறியோம்
அடுத்திந்தலோகத்தில் வேறொருவர்க்கெம்மைப்போ
லமையுமோஇனிவிட்டுப் பிறியோம்-நாங்கள்
அருமையாகப்பெற்ற பாக்கியமேபாக்கியம்
ஆர்க்குண்டிதனளவைக் குறியோம்
திடத்துறுதீவினை யென்றுரைத்திடும் பேச்சு
திரும்பிக்கிட்டிவருமோ செல்லாததன்றன் வீச்சு
தடுத்துவந்தாண்டருள் செய்தாய்சஞ்சிதம் போச்சு
சாற்றுதற்கரிதான சென்மசாபல்ய மாச்சு
தரமோசுரார லுரைசெய வேசுப
கரமாகியமக தேவதே வாதிப. சம்போ.

எண்ணிக்கைதன்னிலோர் சிறிதுஞ்சேரத்தகாத
ஏழைகள்மீதினிற் கண்யம் — உடன்
இதயகித்திருவுள்ளத்திற் பரிந்துதிருவருளா
லினியகடாக்ஷவீ க்ஷண்யம்
பண்ணும்படிகயிலை தன்னிலிருந்துசெவ்வேள்
பார்வதியுடனேலா வண்யம்—ஆகப்
பார்த்துத்தரிசித்திடத் தீர்க்கமுடனேநாங்கள்
பலகாலுஞ்செய்ததே புண்யம்
விண்ணில்வெள்விடைமீதில்மேவிவரவுங் கண்டோம்
விளங்குந்திவ்யசேவை சேவித்துப்பவம விண்டோம்
மண்ணிற்பிறந்துழலும் வகையேயினிமே லண்டோம்
வற்றுமல்வளர்ந்தேறும் நித்யானந்தமுங் கொண்டோம்
மறவாநிலைசன காதி சுபாகர
முறவேயருளிய யோக பராபர. சம்போ.

திங்களுங்கங்கையுங் கொன்றையந்தாமமுந்
திகழ்செஞ்சடையினிற் றங்க—வொளிர்
திவ்யநுதலிற்றிரி புண்டரந்தழைத்திடத்
திருவிழிகளிலருள் பொங்க
புங்கவர்போற்றுநீல கண்டமிகநன்றுகப்
பொலிந்திடமார்பிலுத் துங்க — சற்ப
பூஷணஞ்சிரமாலை யசங்கத்திருச்செவியிற்
புஜங்ககுண்டலங்கள்வி ளங்க
பங்கயமலர்போலுஞ் செங்கரத்தின் மிசைய
பாரசூலாயுதப்படையு மிகு விசைய
மங்களமான்மழு வாயுதமும் இசைய
வரிப்புலித்தோலாடை வயங்கியிடை யசைய
வதிநூபுரமென மாமறை சூட்டிய
கதியேதருபத சேவையுங் காட்டிய. சம்போ.

---

## சிறுத்தொண்டர்முதலானபேர்கள் முத்திபெறுதல்.

### விருத்தம்.

விரிவுபெறஇவ்வண்ணந்துதித்துநிற்க
விமலனார்கனிந்தஅருட்கடைக்கண்சாத்த
வரமருவுஞ்சிறுத்தொண்டர்நங்கையார்சீர்
வாய்ந்திட்டசீராளர்சந்தனத்தா

கருதரியவிமானத்தின்மேவியென்றுங்
கனபரமானந்தசுகமனுபவிக்க
உரமிருந்தசித்திரைநாள்பரணிதன்னில்
உற்றுளார்கைலாசம்பெற்றுளாரே.

---

## மங்களம்.

தரு-இராகம்-சௌராஷ்ட்டிரம்-ஏகதாளம்.

பல்லவி.

மங்களம் சுபமங்களம் - நிதய
மங்களம் ஜெயமங்களம்.

அநுபல்லவி.

புஙகவர்போற்றிடுந் துங்கவிக் கேசஅன்
புள்ளகுணாளாக்கும் வள்ளி மணாளர்க்கும்
புகழ்மால்பிரமர்க்கும் நய
மிகுசீர்பரமர்க்கும் ஜெய. மங்களம்.

சரணங்கள்.

நன்மைஎல்லாந்தரும் பொன்மலை யின்றிடும்
நங்கைசர்வாணிக்கும் பொங்கு கல்யாணிக்கும்
நகுபூ மகளுக்கும் நய
மிகுபா மகளுக்கும் ஜெய. மங்களம்.

வெம்பந்தந்தீர்த்தருள் சம்பந்த மூர்த்திக்கும்
வீறுந்தேவாரங்கள் கூறுஞ்சொல்வேந்தர்க்கும்
விருதாரூசுந் தரர்க்கும் நய
நிறைவாதவூ ரர்க்கும் ஜெய. மங்களம்.

தண்புகழ்சேர்சிறுத் தொண்டர்க்கும்நங்கைக்கும்
சநதனத்தாதிக்கும் விந்தை சீராளர்க்கும்
தரைமேல்முனி வர்க்கும் நய
வரமேவம ரர்கரும் ஜெய. மங்களம்.

பங்கமில்லாஅருள் தங்குங் கணேசராற்
பம்புசீர்மேவிய நம்பியாண் டாருக்கும
பயில்சேவையர் பதிக்கும் நய
மியல்நூல்சுரு திக்கும் ஜெய. மங்களம்.

சீர்த்திபெறஇதைக் கீர்த்தனமாச் செய்த
திரு ராமசாமிக்கும் பெருமைசேர் பூமிக்கும்
தெருள்சேர்புல வர்க்கும் நய
வருள்கூர்பெரி யர்க்கும் ஜெய. மங்களம்

---

## இக்கீர்த்தனையி லுள்ள இராகத்தொகை.

விருத்தம்.

அரனருளினைப்பெறுசிறுத்தொண்டநாயனார்
அஞ்சரிதநாடகத்துள்
அமைகீர்த்தனங்களாமைம்பத்திநான்கிற்கும்
அவிரிராகஙகள்வினவில்
சுரதகலியாணியேழ்காமபோதிஆறுநற்
றோடிசங்கராபரணமாச்
சூழ்வகைக்கொருநான்குமோகனம்பயிரவி
சுருட்டிமும்மூன்றதாகும்
வரமனும்அசாவேரிசாவேரியாரபி
வரும்பியாகடைநாதநா
மக்கிரியைசௌராஷ்டிரம்முகாரிபந்து
வராளியொர்வகைக்கிரண்டாம்
தரமத்யமாவதியொடானந்தபயிரவிசொல்
சாரங்கம்நாட்டைகாப்பி
சகானாஅடாணாபுன்னகைவராளியுந்
தனித்தனியதொன்றென்பவே.

## விருத்தங்கீர்த்தனை முதலியதொகை.

விருத்தம்.

விளங்கும்வெண்பாவொன்றுடன்தோடயமுமொன்று
மேன்மைதிகழ்திபதையைந்துதருநாற்பத்தெட்
டுளங்களிக்கும்விருத்தமுப்பானிரட்டியாக
வோங்குதொகையொருநூற்றுப்பதினைந்தாகும்
வளங்குலவுசிறுத்தொண்டநாயனார்தம்
மகத்துவஞ்சேர் சரித்திரநாடகமீதென்றுங்
களங்கமறப்படித்திட்டோர்கேட்டோராயாருங்
காசினியில்நீடூழிவாழ்வர்தாமே.

சிறுத்தொண்டநாயனார் சரித்திரகீர்த்தனை:
முற்றிற்று முற்றும்.

...கள் நூல்நி...